9/9/1951 M.V.M B.2

போர்வாள்

வாள் 5 வீச்சு 2

8-9-51 சனிக்கிழமை

ஆசிரியர்கள்:
காஞ்சி. மணிமொழியார்
பா. இளஞ்செழியன் B.A. Hons

துணை ஆசிரியர்:
காஞ்சி கல்யாணசுந்தரம்

விலை 2 அணா

"தென்றலே! வீசாதே!"

தென்றலைப் பார்த்து நீ வீசாதே என்று சொன்னால், அது வீசாமலா போய்விடும்?

வெண்ணிலாவை நோக்கி நிலவே, நீ குளிர்ச்சியாய் இராதே" என்று கட்டளையிட்டால் அதன் பண்பு மாறியா போய்விடும்?

கதிரவனை அழைத்து, ஞாயிறே நீ உலகுக்கெல்லாம் ஒளி தராதே என்று ஆணை பிறப்பித்தால், அந்த ஆணைக்கு இணங்கி அதன் ஒளி மங்கியா போய்விடும்?

அலைகடலை விளித்து, கடலே நீ கொந்தளிக்காதே என்று தாக்கீது பிறப்பித்தால், அந்தத் தாக்கீதுக்கு ஒப்புக்கொண்டு, கடல், தன் கொந்தளிப்பை நிறுத்தவா செய்யும்?

அதுபோலத்தான், திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பார்த்து, ஆட்சியாளர்கள், "கழகமே! மூடநம்பிக்கையை விரட்டிப் பகுத்தறிவைப் பரப்பும் புனிதமான பணியதனைப் புரியக் கூடாது நீ" என்று 144 பிறப்பித்துவிட்டால், அதற்காகக் கழகம், தன் பணியை நிறுத்தவா செய்யும்?

இனிமையாக வீசுவது தென்றலின் இயல்பு. குளிர்ச்சியாய் இருப்பது வெண்ணிலாவின் இயற்கை. 'உலகுக்கெல்லாம் ஒளி தருவது கதிரவனின் கடமை, கொந்தளித்துக்கொண்டே இருப்பது அலைகடலின் பண்பாடு எவர் எதிர்த்தாலும், எவர் பகைத்தாலும், எவர்

(16-ம் பக்கம் பார்க்க)

தடையை மீறிக் கைதாகிய

"போர்வாள்" துணையாசிரியர்
காஞ்சி. கல்யாணசுந்தரம்



ஐந்தாம் பகுதி

கெண்டையைக் காட்டி!.....

உலகில் ஒருவன் ஏழையாக வாழ்ந்தால் அவனுக்குத் துன்பமுண்டு! வறுமையுண்டு! செல்வத்துடன் வாழ்ந்தால் அவனுக்குப்பயமுண்டு! பகைவருண்டு! செல்வாக்குடன் வாழ்ந்தால் அவனைக் கண்டும், அவன் நிலையைக் கண்டும் பொறாமையும் பொச்சரிப்பும் கொள்ளும்பிண்டங்கள்பலஉண்டு! அவனை உக்கிரமாகப் பார்க்கும் வஞ்சகவிழிகள் பல உண்டு! அவன் உயிரைக் குடிக்க வேட்கையுடனிருக்கும் வாட்கள் பல உண்டு!

ஒண்டவந்த பிடாரிக்கு ஊர்ப்பிடாரியை விரட்டுவதில் ஒரு இன்பம்! பட்டம், பதவி, செல்வம், செல்வாக்கு ஆகியவை, தான் மட்டுமே போர்த்திக்கொள்ள வேண்டிய போர்வைகள் என்ற எண்ணங்கொண்ட மனிதர்கள் உண்டு!

மாற்றொருவன் மேன்மையான நிலையிலிருப்பதைக் காணச் சகியாது அவர்களுக்கு! அவனைப் போலவே தாமும் மேன்மையான நிலையையடைய முயற்சிக்க மாட்டார்கள்! அவனை அந்த இடத்திலிருந்து நீக்கித்தாங்கள் அந்த நிலையைப் பெறுவதற்குப் பெரும்பாடனுபவிப்பார்கள்! பலப்பல திட்டங்கள் தீட்டுவார்கள்! பச்சோந்திகளாக மாறுவார்கள்! பசுத்தோல் போர்த்த புலிகளாகக் காட்சிதருவார்கள்! ....

ஒரு தகப்பன் தன் அன்புமகனை அதிகமாக நேசித்து அவனைச் செல்வமாக வளர்த்தால், அவன் விட்டோய் அந்தத் தகப்பன் மீதோ மகன் மீதோ பொறாமை கொள்ளாது! ஆனால் "மனிதனுக்கு" அந்த உயர்ந்த பண்பு கிடையாது!......

நஞ்சநாதன்!—வஞ்சகத்தின் உறைவிடம் அவன்! பஞ்ச தந்திரங்களறிந்த பரம்பரையினன்! கொஞ்சிக் கொஞ்சிக் குலாவுவான்! கொஞ்சம் ஏமாந்தால் நஞ்சைக் கக்கிவிட்டுச் சென்றிடுவான்! கெஞ்சிக் கெஞ்சிப் பேசி நெஞ்சை நெகிழச் செய்வான்! துரோகத் திருவிளையாடல் நடத்துவான்!......

அந்த ஒட்டகத்திற்கு இடங்கொடுத்து விட்டார் வேந்தர்!—கொடுக்கச் செய்து கொண்டான் அக்கயவன்!—தன் சாகசப் பேச்சால்! சாகசமான நடிப்பால்!......

முல்லை நாட்டின் மூலையொன்றிலுள்ள சிற்றூரின் குட்டித் தெருக்காளிக் கோவிலொன்றில் பெருச்சாளிகளோடு போட்டியிட்டு, மணியாட்டி வயிறு வளர்த்து வந்த அவன், தந்திரத்தால், சூழ்ச்சியால் அரசசபையிலும் அடியெடுத்து வைக்க முடிந்தது! அங்ஙனம் முன்னேறுவது கடினமானதொரு காரியமல்ல! ஆனால் நம் போன்றோருக்கு அது முடியாத காரியமாகிறது, மனச்சாட்சியென்று ஒன்றிருப்பதால்.

பதவியினைப் பெற பூசுரன் கையாண்ட வழி என்ன தெரியுமா?... கையூட்டு கொடுத்தான் கயவன்!... அர்ச்சனை செய்து மணியாட்டிப் பணம் சம்பாதிக்கும் பூசுரனுக்குக் கையூட்டு அளிக்கப் பணம் ஏதென்கிறாயா?......பணம் அவனிடம் கையூட்டு அளிக்கும் அளவில் இல்லாமல் தான் இருந்தது! அவனிடம் பணம் அதிகமாக இருந்திருந்தாலும் அதை அவன் இலஞ்சமாக அளித்திருக்க மாட்டான்! ஆம். அவன் அளித்த இலஞ்சம் பண உருவிலே அல்ல வேறொரு உருவிலே இருந்தது!...... அது ஒரு விசித்திரமான, விந்தை தரும் வகையான கையூட்டு!...

ஆம். கெண்டையைக் காட்டி விராலைப் பிடிக்கும் சூழ்ச்சி!...... என்ன?...விளங்க வில்லையா?....விளங்காது!...

மான்விழிகள்!...மையற்பார்வை மோகன சிரிப்பு!...

இவைதான் மணி ஆட்டி[illegible] கொண்டிருந்தவனை, மணிமு[illegible] தரித்த மன்னரின் மன்றத்திலே ம[illegible] தையோடு அமரச் செய்தன!...

விக்கிரமன்!—முல்லை நாட்டின் முதன் மந்திரி! மன்னரின் மதிப்பைப் பெற்றவன்! மதிநுட்பமிகு[illegible] அமைச்சன்! அந்த விராலுக்குத் தான் கெண்டையைச்—"சே[illegible] விழிகளை"க் காட்டினான் ஆரியன்! இளமை அளவின்றிக் கொழுந்திட்ட[illegible] அமைச்சனின் முன்பு ஆரணங்கைக் காட்டினான் ஆரியன்! அமைச்சனின் உள்ளத்திலே ஆசைத்தீயையும், மூளையிலே மயக்கத்தையும் மூளச்செய்தான் பூசுரன்! அமைச்சன் அடியற்ற நெடும் பனையானான்!......

ஆம், ஓர் நாள் விக்கிரமன், முல்லைக் காடொன்றுக்கு வேட்டைக் கேகினான். இதனை முன்கூட்டியே அறிந்திருந்தான் ஆரியன். அரிய சந்தர்ப்பம்! பக்குவமாகப் பயன்படுத்திக் கொண்டான் பூசுரன்!...

வானோங்கி வளர்ந்துள்ள மா, பலா, கொன்றை, காயா, கருவேல் முதலான மரங்கள் அடர்ந்துள்ள அக்காட்டில் மந்திரி விக்கிரமன் ஓர் மானைத் துரத்திக்கொண்டு ஓடிக் கொண்டிருந்தான். மான் துள்ளிக் குதித்தோடிக் கொண்டிருந்தது.

"ஏய், இங்கே ஒரு மானைப் பார்த்தாயா?..." மானைத் துரத்திச் சென்று அலுத்த அமைச்சன், தன் எதிரே வந்துகொண்டிருந்த ஆரியனைக் கண்டான்.

"நமஸ்தே! தீர்க்காயுசுப்வா!......

"மந்திரியாரே! மானைத்தானே கேக்றேள்?...இதோ இந்தப் பக்கம்தான் துள்ளிக்குதித்தோடிற்று! ...அதோ அந்தப் புதர் பக்கமாக..."புன்சிரிப்புடன் பேசினான் பூசுரன்!

"சரி..."—அவசரமாக ஓடினான் அமைச்சன். அவர் ஓடுவதைப் பார்த்து இலேசாகச் சிரித்தான் நஞ்சநாதன்.

ஒரு செடிப்புதருக்கு வெளியே இலேசாக ஒரு காரிகையின் ...ம் தெரிந்துகொண்டிருந்தது. அமைச்சன் அதைப் பார்த்துவிட்டான். அணங்கென்பதை அறிந்து கொண்டான் ஆணழகன். பச்சைப் பட்டுப்புடவை யுடுத்தி, கரிய ...தலை அழகாகக் கோதிவிட்டிருந்த பாவையின் பளிங்கு ...தைப் பார்க்கத் துடித்தான் அமைச்சன்மான் வேட்டைக்கொரு ...வு கொடுத்து, மங்கையவளை நெருங்கினான். அருகேயிருந்த ஒரு ... ரோஜாச் செடியிலிருந்து ...லரைக் கிள்ளி அதை முகர்ந்து ...த்தம் குளிர்ந்து, தலையை ...துப்பின் அதை அவள் ...ந்தலிலே சூட்டினான். சிறிது நேரம் அவள் பின்னே மௌனமாக நின்றுகொண்டிருந்தான். பின் மெல்ல கனைத்தான். வனிதை வெடுக்கென்று திரும்பினாள். தடந் தோளான் காதல் மணம் கமழ இலேசாகச் சிரித்தான்! தையல் தலைகுனிந்தபடியே சிரித்தாள். பசும்மேனியாளின் சேல்விழிகளைக் கண்டு சொக்கிவிட்டான் செம்மல்! பாவையின் பாகுப்பேச்சைக் கேட்கத் துடித்தான்.

"மான் வேட்டைக்கு வந்தேன்! .....கவரி மானுக்கும், காரிகைக்கும் பேதமறியாது....." புன்னகை கமழப் பேசிக்கொண்டே அரிவையை அணுகினான் அமைச்சன். மங்கை நாணிக் கோணி நின்றாள்.

சற்று தூரத்தில், இரு மரக்கிளைகளின் இடுக்கிலே தன் தலையை நீட்டிப் பார்த்துக்கொண்டிருந்த பூசுரன் தலையை மேலும் கீழுமாக அசைத்து ஒரு அசட்டுச் சிரிப்பு சிரித்தான்!—தன் மகளை மற்றொருவன் மார்புறத் தழுவிக்கொள்ளும் காட்சியைக் கண்டு!!

மற்றொரு புறத்தில் செடிப்புதருக்குள்ளிருந்து தன் தலையை நீட்டிப் பார்த்துப் பல்லைக் கடித்துக்கொண்டு சற்று கோபத்துடன் தலையை மேலும் கீழுமாக அசைத்தான் மாறன்!—முல்லை நாட்டுத் தளபதி!

தளிர்மேனியாளும் தலையை மெள்ள அசைத்தாள்!—"நீ நஞ்சநாதனின் மகள்தானே"! என்று அமைச்சன் கேட்ட கேள்வியொன்றிற்குப் பதிலைப் பகரும் பாணியில்!

"பேரழகியே உன் பெயர்?"

"வனமாலா!"

"வனமாலா! அழகான பெயர்! வனமாலா, நீ வனமாலாவா, வான மாலாவா?...வாலிப வனப்பு வழிகிறது கண்ணே உன் பொன்னிற மேனியில்!...பார்க்கப்பார்க்கத் திகட்டவில்லையே!..."

வனமாலாவின் அழகுதரங்களை அசைத்துப் பேசினான் அமைச்சன். அவள் மலர்க்கரங்களைப் பற்றிக்கொண்டு அருகிலிருந்த ஒரு மர நிழலில் உட்கார்ந்தான்.

வலதுகரத்தால் வலையையூன்றியபடி அம்மரத்தடியில் படுத்துக்கொண்டு தன் அருகில் உட்கார்ந்து கொண்டிருந்த வனமாலாவின் கரங்களைத்தன் இடது கரங்களால் பற்றி மார்பில் ஒத்திக்கொண்டிருந்தான்! கயல் விழியாள் கண்களால் மொழி பேசிக்கொண்டிருந்தாள்.

இன்ப வெள்ளத்திலே இவ்விருவரும் மிதந்துக்கொண்டிருந்த இந்தக் காட்சியைப் பார்த்துப் பூரித்துக்கொண்டிருந்தான் பூசுரன்! தன் எதிர்காலத்தை எண்ணி ஆநந்தப்பட்டுக் கொண்டிருந்தான்! தன் மகளுக்குச் சைகை காட்டினான்.

"அன்பரே..."

"என்ன கண்ணே?..."

"உம்மிடம் ஒரு உதவியை நாடுகிறேன்! அளிப்பீரா?..."

"ஒன்றென்ன..."

"அன்பரே! என் தந்தை, பிராமண குலத்தில் பிறந்தும் இன்று "பூதேவாள்" வாழவேண்டிய முறையில் வாழ முடியாது வறுமையில் உழன்றுகொண்டிருக்கிறார்!..."

"ஆமாம் ஆமாம். சூத்திரப் பயல்களெல்லாம் சேனைத்தலைவர்களாகவும், சூட்சமம் உரைக்கும் அமைச்சர்களாகவும் ஆகிவிட்டிருக்கின்றார்கள்! அந்தணர் குல திலகங்கள் குப்பையில் கிடக்கும் மாணிக்கங்களாக உள்ளார்கள்! ஆம், அவர்கள் நிலை மிகமிக உயரவேண்டும்! இல்லாவிடில் சாத்திரம் சிறிப்பாயும்! மனுதர்மம் மதிக்கப்படாமற் போய்விடும்!..."

"என் தந்தை பிராமணர்களில் சற்று சிரேஷ்டமான வகுப்பைச் சேர்ந்தவர். ராஜகுருவாக இருக்க வேண்டியவர். இன்று சூத்திரப் பயல்களின் சூழ்ச்சி ஏற்படுத்தித் தந்துள்ள சூழ்நிலையால் ஒரு சாதாரணப் பூசாரியாக இருக்கிறார்!..."

"ஆமாம். ஆமாம், அவர் நிலை உயர்ந்துதானாகவேண்டும். இப்பொழுது இருக்கும் ராஜகுரு இறந்தபின் உன் தந்தையார்தான் அந்தப் பதவியை ஏற்கத் தகுதியும் திறமையும் மிகுந்த ஒரே உத்தம பிராமணர்!...நீ அதைப்பற்றிக் கவலைப் படாதே கண்ணே!... அவரை நல்ல நிலைக்குக்கொண்டு வர வேண்டியது என் பொறுப்பு! கடமை!..மன்னர் என் மதியாலோசனைகளை மணிகளாக மதிப்பவர்! அரசவை என் விளையாட்டு மண்டபம்! என் சொல்லுக்கு எதிர்ச்சொல் வீசும் வல்லவன் ஒருவனும் கிடையாது அங்கே!..." படபடவென்று பேசிவிட்டுப் பாவையின் பொற்கரங்களைப் பற்றிக்கொண்டான் விக்கிரமன்!

"அன்பரே! அப்பாவுக்கு உம் மீது மிகவும் பிரீதி! நம்பிக்கை!..."

"அது எனக்குத் தெரியும் மாலா!...நீ ஒன்றுக்கும் பயப்படாதே! இன்னும் சிறிது காலத்தில் உன் தந்தை நஞ்சநாதர் அரசவையில் அமர்ந்திருக்கப் போகிறார்!...இப்பொழுது திருப்திதானா?..." கெண்டைவிழியாளின் கண்ணாடிக் கன்னங்களைத் தட்டிக் கொஞ்சும் மொழியால் பேசினான்! பொன்னுடலாள் அவன் பரந்த மார்பிலே சாய்ந்தாள். பருவக்காளை பரவசமடைந்தான்! புது விருந்துண்டான்! பூவையின் கையிலே ஒரு பணமூட்டையைக் கொடுத்தான்! விடைபெற்றுக் கொண்டான்.

மகளின் மையல் விழிகளால் மந்திரியைத் தன் வலையில் சிக்க வைத்துக்கொண்டான் பூசுரன்! பணம் அவனிடம் குவிய ஆரம்பித்தது! மந்திரியும் மதியிழந்தான்! மீன்விழியாளின் மதுரமொழி கேட்டுக்கொண்டிருப்பதையே மோட்ச இன்பமாகக் கருதினான். வாளேந்தியை, வளையேந்தியைக் கொண்டு தன் வயப்படுத்திக் கொண்டான் புல்லேந்தி! அதிக காலம் செல்லவில்லை!—விக்கிரமன் அக்ரமச் செயல்கள் பலபுரிந்து நஞ்சநாதனை ராஜகுருவாக்கி

(6-ம் பக்கம் பார்க்க)

மாவீரன்! மாஜினி!

[மறை முதல்வன்]

பொன்னும், மணியும், பட்டுத்துணிகளும், ஏற்றிய கப்பல் ஜினேவா நகரத்து கடலலைகளை முத்தமிட்டுக் கொண்டிருந்தன! பனிப்படலம் இன்னும் மறையவில்லை,—பனி மூட்டத்தினால் சூழப்பட்டிருந்த அந்த நகரம், வெள்ளாடை அணிந்திருக்கும் பெண்ணைப் போலத் தோன்றியது! மனிதர்கள் நடமாடுவது ஏதோ நிழலாடுவதைப் போலத் தெரிந்தது! மரங்களின் இலைகளில் படிந்திருந்த பனித்துளிகள், காற்று வீசும்போது இலைகள் அசைவதால் பொலபொலவென உதிர்வது கண்களுக்கு கவர்ச்சி தருவதாக இருந்தது!

அந்த நகரத்து தெரு ஒன்றில் சிறுவன் ஒருவன், அவனுடைய அன்னை, நண்பரொருவர்-ஆகிய மூவரும் வந்துகொண்டிருந்தார்கள். திடீரென்று அவர்கள் பின்னாலிருந்து ஒருவன் ஓடிவந்தான். "சட்டவிரோதிகளான இத்தாலியர்களுக்கு" என்று கூறிக்கொண்டே ஒரு வெள்ளைத் துண்டை அவர்கள் முன் விரித்தான். சிறுவனின் அன்னையும், நண்பரும் சில காசுகளை அதில் போட்டனர். உடனே அவன் அவர்களை வணங்கிவிட்டு போய் விட்டான். ஆனால் சிறுவனுக்கு ஒன்றுமே விளங்கவில்லை! அவனுடைய சந்தேசம் கேள்வி உருவிலே கிளம்பியது!

"அம்மா! இவன் யார்? ஏன் பிச்சையெடுக்கிறான்?"

"கண்ணே! ஆஸ்திரிய ஆதிக்கத்தின் ஆணவப் போக்கை எதிர்த்துப் புரட்சி செய்தவர்களில் ஒருவன் இவன்! ஆனால் அரசாங்கம் அடக்குமுறை அம்புகளை வீசி புரட்சியை அடக்கிவிட்டது! அதிகாரத்தின் பிடியிலிருந்து தப்பி, வெளிநாடுகளுக்கு ஓடி இப்படி பிச்சையெடுத்து பணம் சேர்க்கிறான்."

இந்த நிகழ்ச்சி சிறுவனின் மனதில் ஒரு சிந்தனை அரங்கை ஏற்படுத்தியது! துணி விரித்து பிச்சையெடுக்கும் இவனைப் போல் எத்தனைபேர் நாட்டு விடுதலைக்காக தங்கள் சுகவாழ்வை பலியிட்டு அவதிப்படுகின்றனரோ, எத்தனைபேர் அதிகாரத்தின் இரும்புப் பிடியில் சிக்கி சீரழிகின்றனரோ, எத்தனை பேருடைய உரிமை உணர்ச்சி நிரம்பிய இருதயங்கள் அதிகாரத்தின் கோரப்பற்களால் கிழித்தெறியப்படுகின்றனவோ, என்றெல்லாம் நினைத்த பொழுது.... ....சிறுவனின் இதயம் உணர்ச்சியால் விம்மியது! அன்னிய ஆதிக்கத்திலிருந்து தன்னுடைய நாட்டை விடுவிக்கும் பணியில் தன் வாழ்வையே அர்ப்பணித்து விடுவது என்று தீர்மானித்துக்கொண்டான்!

யார் இந்தச் சிறுவன்? இவன்தான் இத்தாலியின் விடுதலைக்காகப் போராடிய மாவீரன் மாஜினி! காலமெல்லாம் உரிமை வாழ்வுக்காக உழைத்து உயிர் விட்ட உத்தமன்!

* * *

சிதறிக் கிடந்த இத்தாலியை ஒன்றாக்கி, இத்தாலியர்களின் இருதயகீதமாக விளங்கிய நெப்போலியன் 1815-ம் ஆண்டு ஐரோப்பிய அரசியல் அரங்கத்திலிருந்து மறைந்தான்! உடனே ஆஸ்திரியா தன் ஆதிக்கத்தை இத்தாலியில் நிலைநாட்டியது! அவ்வளவுதான்! இத்தாலியர்களின் உரிமைவாழ்வு [illegible] பறிக்கப்பட்டது! அவர்களுடைய மனப்போக்குகள், தேவைகள், நோக்கங்கள் எல்லாம் ஒடுக்கப்பட்டன! சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்ற எண்ணங்கள் சுட்டுப் பொசுக்கப்பட்டன! பேச்சுரிமை, எழுத்துரிமை என்று யாராவது பேசினால், உடனே அவர்களுக்குக் கசையடி, இருட்டறை, கைகால் விலங்கு இவைதான் பரிசளிக்கப்பட்டன! சாக்கடைச் சகதியிலே நெளியும் புழுவை விடக் கேவலமாக, குப்பை மேட்டிலே குந்திக் கிடக்கும் சொறிபிடித்த நாயைவிட கீழாக மக்கள் வாழ்க்கையை நடத்தினார்கள்.

இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலைதான் மாஜினியை தன்னுடைய சொகுசான வாழ்வை உதறிவிட்டு நாட்டுக்காகப் போராடத் தூண்டியது! மாஜினி சிறு வயதிலேயே நாட்டு விடுதலைக்காகப் போராடி மாண்ட வீரர்களின் வரலாறுகள், அடிமையைக் குழி தோண்டிப் புதைக்க நடந்த புரட்சிப் போராட்டங்கள், இவற்றை விளக்கிடும் புத்தகங்கள் பலவற்றைப் படிப்பான்! இதனால் அவனுடைய இளம் உள்ளத்தில் நாட்டுப் பற்று வளர்ந்தது! என்றாலும் ஆரம்பத்தில் தீட்டிய நிகழ்ச்சியும், அப்போதிருந்த ஒரு சூழ்நிலையும்தான் அவனுடைய உள்ளத்தில் புகைந்து கொண்டிருந்த நாட்டுப் பற்றைக்

கொழுந்துவிட்டெரியச் செய்தது! அந்த நிகழ்ச்சி அவனுடைய மனதில் மட்டுமல்ல, வாழ்க்கையில் கூட ஒரு மாறுதலை உண்டாக்கியது!

மாஜினியின் வாழ்வில் ஏற்பட்ட மாறுதலைவிட அதன் விளைவு மகத்தானது! ஆம்........! அந்த மகத்தான மாறுதலின் விளைவுதான் "யௌவன இத்தலி" கழகம்! அன்னியரிடம் ஆட்பட்டுக்கிடக்கும் நாட்டை மீட்க வேண்டுமென்ற, அவனுடைய உள்ளத்திலெழுந்த எண்ணங்களின் உருவம்தான் "யௌவன இத்தலி!"

பல தொல்லைகளுக்கிடையே தான் மாஜினி "யௌவன இத்தலி" கழகத்தை நிறுவினான். என்றாலும் அது யூக வேகமாக வளர்ந்தது! செல்வமும், செல்வாக்குமில்லாத ஆனால் கொண்ட கொள்கையில் உறுதியும், தளராத உழைப்புங் கொண்ட ஒரு சிலரின் உதவியைக் கொண்டு பணபலம், பத்திரிகை பலம் இன்றி மாஜினி ஆரம்பித்த இயக்கம் நாடெங்கும் பரவலாயிற்று! பட்டிதொட்டிகளெல்லாம் கிளைக் கழகங்கள் தோன்றின! மாஜினியின் எழுத்துகள் மக்கள் மனதைக் கட்டிப் பிடித்திழுத்தன! அவனுடைய பேச்சு ஒவ்வொன்றும், தான் பிறந்த பொன்னாட்டை மறந்து மாற்றானுக்கு அடிவருடிகளாக காலந்தள்ளும் கயவர்களுக்குச் சம்மட்டி அடிகளாக விழுந்தன! இரண்டே ஆண்டில், மாஜினியின் எரிமலை பொறிக்கப்பட்ட கருப்புக்கொடியின் கீழ் அறுபதினாயிரம் பேர் அங்கத்தினர்களாக அணிவகுத்து நின்றார்கள்!

மாஜினியின் தலைமையின்கீழ் உருவாகின்ற பலமானதொரு இயக்கம், தங்கள் எதேச்சாதிகாரத்தை உருட்டித் தள்ளப் போகிறது என்பதை உணர்ந்த அரசாங்கம் தன்னுடைய அடக்குமுறையை ஆரம்பித்தது! இத்தாலி மட்டுமல்ல, பிரான்சு, ஸ்விட்சர்லாந்து.........இப்படி அவன் செல்கின்ற ஒவ்வொரு நாடும் அவனை விரட்டியடித்தது! ஓநாயைப்போல வேட்டையாடியது! ஊர் ஊராக, நாடு நாடாக, காடுமலைகளைப் பொருட்படுத்தாது ஓடினான்! ஏன்? தாய் நாட்டுக்குத் தொண்டு செய்யவேண்டுமென்ற ஒரே காரணத்துக்காகத்தான்! கடைசியில் இங்கிலாந்து மாஜினிக்கு ஆதரவளித்தது!

எங்கு உரிமை நசுக்கப்படுகிறதோ, இன உணர்வு சிதைக்கப்படுகிறதோ, உழைப்பு கொள்ளையடிக்கப்படுகிறதோ அங்கெல்லாம் உரிமைப் போராட்டங்கள் நடந்தே தீரும்! இதைத்தான் உணர்த்தியது 1848-ம் ஆண்டு! ஆம்...! இவ்வாண்டுதான் ஒவ்வொரு நாட்டிலும் மக்கள் எதேச்சாதிகாரத்தை எதிர்த்து புரட்சி செய்தார்கள். முடியாட்சி மாளவேண்டும், மக்களாட்சி மலரவேண்டும் என்று முழக்கமிட்டார்கள்! இப்படிப்பட்ட புரட்சி ஒன்று இத்தாலியிலும் ஏற்பட்டது, அந்தப் போராட்டத்திலே ஆஸ்திரிய ஆதிக்கத்தின் கோட்டை கொத்தளங்கள் மண்ணோடு மண்ணாக்கப்பட்டன! புரட்சி வெற்றியடைந்தது கேட்டு மாஜினி ஓடோடிவந்தான் இத்தாலி நோக்கி!

மக்கள் விழித்தெழுந்துவிட்டார்கள், இனி நம்முடைய அதிகாரம் செல்லாது என்பதை ஆஸ்திரியா உணர்ந்தாலுங்கூட தன்னுடைய படையை ஒழுங்கு படுத்தியது அடுத்த போருக்காக. ரோமாபுரியை ஆண்ட போப்பரசருக்கு, பிரெஞ்சு படை ஒன்று உதவிக்கு வந்தது! இந்த பலமானதொரு புதிய தாக்குதலை சமாளிக்கவேண்டிய நிலை ஏற்பட்டது மாஜினிக்கும் அவனது கூட்டத்தாருக்கும்! இத்தாலிய வீரன் கரிபால்டி தன் தொண்டர் படையுடன் மாஜினிக்கு உதவி செய்தான்! ஆதிக்க வெறியர்களுக்கும், விடுதலை வீரர்களுக்குமிடையே பெரும் போராட்டம்! புரட்சிக்காரர்கள் எண்ணிக்கையில் மிகுந்த பிரெஞ்சுப்படைகளோடு எதிர்த்து நிற்க முடியவில்லை. கடைசியில் இத்தாலி மீண்டும் எதேச்சாதிகாரிகள் கையில் சிக்கியது! ஆனால் சில காலத்துக்குத்தான் அவர்கள் ஆட்சி நிலை பெறமுடிந்தது! சில காலத்துக்குப்பின் விக்டர் இமானுவல், காவர், ஆகிய இருவரின் முயற்சியினால் முடிவாக இத்தாலி விடுதலை படைத்தது!

மாஜினி எந்த லட்சியத்துக்காக தன் வாழ்வை பணயம் வைத்துப் போரிட்டானோ, அந்த லட்சியம் பாதியளவு வெற்றியடைந்தது! ஆம்......! அப்படித்தான் கூறவேண்டும். ஏனெனில் மாஜினி விரும்பியது குடியரசு இத்தலி! ஆனால் ஏற்பட்டதோ முடியரசு இத்தலி! இப்படி ஏற்பட்டாலுங்கூட அவன் தன் குடியரசுக் கொள்கையை கடைசி மூச்சு இருக்கிறவரை கைவிடவில்லை! முடியரசு இத்தலியை குடியரசாக்க முயற்சிகள் பல செய்தான். ஆனால் தோல்வியே கண்டான்; போராட்டத்தில் பிறந்து, போராட்டத்திற்காகவே வாழ்ந்த மாஜினியின் உடல் மிகவும் தளர்ந்து போயிருந்தது! தான் நடத்திய புரட்சிகள் யாவும் தோல்வியிலே முடிந்ததைக் கண்ட மாஜினியின் மனம் மிகவும் வருத்தமடைந்தது! இவை யாவும் சேர்ந்து கொண்டு

(12-ம் பக்கம் பார்க்க)

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

முடிக்க! அதோடு, அரசர், நஞ்சநாதனை ஒரு நல்லொழுக்கசீலனாக, உண்மை பக்தனாக, பரமசாதுவாக மதிக்கச் செய்துவிட்டான்! பூசுரனும் பசுத்தோல் போர்த்த புலியாக நடந்து மன்னரின் மதிப்பைப் பெற்றுக்கொண்டான்!...

இங்ஙனம் தான் கெண்டையை—கெண்டைவிழியாளைக் காட்டி, விக்கிரமனென்னும் விராலைப் பிடித்துக்கொண்டு அரசவையில் இராஜகுருவாகிவிட்டான் ஆரியன்!

ஆறும் பகுதி

ஐயோ, இது அநியாயம்!

காலச் சக்கரம் சுழன்று கொண்டேயிருந்தது. மாரிக்காலமும் கோடைக்காலமும் மாறிமாறி வந்து கொண்டிருந்தன. ஈராண்டுகள் உருண்டோடிவிட்டன! அந்த ஈராண்டுகளுக்குள் ஆரியன் எவ்வளவு செலவாக்கும் செல்வமும் அடைந்துவிட்டான் தெரியுமா?... அர்ச்சனை செய்துகொண்டிருந்தவன் ஆதிக்கவாதியாகிவிட்டான்!...

"நஞ்சநாதரே! நீரில்லாவிடில் அரசவை மணியிழந்த மகுடத்தைப் போலத்தானிருக்கும்!...... உமது சாணக்கியம்தான் சகல பிரச்னைகளையும் தீர்த்துவைக்கிறது!......" என்று மன்னர் அவனைப் புகழ்ந்து பாராட்டுகிற அளவுக்குச் "சாது" நாடகம் போட்டுக் கொண்டு வந்தான் சண்டாளன்! பொட்டைமாடியிலே வாழ்ந்து வந்த அவன் மாடமாளிகை கூட கோபுரங்களில் குடியிருக்கலானான்! பணியாளர்கள் பலர் அவனுக்கு! படாடோபமான ஆடையணி ஆபரணங்கள்! அவனுக்கு எட்டாக்கனியாக இருந்து வந்தவைகள் எல்லாம் அவனால் சுவைக்கப்பட்டு எட்டிக்காய்களாக மாறுகின்ற அளவுக்கு அவன் நிலை உயர்ந்து விட்டது! ஆதிக்கவாதியாகிவிட்டான்!......

திருப்தி, நன்றி என்பவைகள் அவன் அறியாதவை!......ஆம். அவன் திருப்தியோ உண்மையான மகிழ்ச்சியோ கொள்ளவில்லை!......

திட்டங்கள்! துரோகத் திட்டத் திட்டங்கள்! சதித் திட்டங்கள்!......

இவைதான் தீட்டப்பட்டன அவனால்!

"இன்பதாசா! நான் உன் தாசன்!..."—இப்படி அரசர் என்னிடம் அன்பு மொழி பேசுவதைப் பன்முறை கேட்டிருக்கிறான் பூசுரன். அவன் உள்ளத்திலே பொறாமையும் பொச்சரிப்பும் பொங்கி எழுவதை எனக்கு நன்கு எடுத்துக் காட்டிவிடும், அவன் முகத்திலே தோன்றும் செயற்கையான மகிழ்ச்சிக் கீறல்கள்! அரசர் சொல்வதை ஆமோதித்து, "அரசே! நீர் மட்டுமா?...இந்த நாட்டு மக்களனைவரும் அவர் தாசர்கள்தான்! அவர் ஓவியங்களைப் புகழாதவர் கிடையாது!..." என்பான். அரசர் சித்தம் குளிர்ந்து போவார். பளபளப்பாக மின்னும் பாம்பிடம்தான் பாஷாணம் உண்டென்பதை அவர் அறிந்து கொள்ளவில்லை. தம்மிடம் தஞ்சமடைந்து கொஞ்சமும் மிஞ்சுதலின்றி நடந்து கொள்ளும் இவன் நெஞ்சிலா வஞ்சகம் வழியும்?... என்று எண்ணிக்கொள்வார் அரசர்!......

ஓர் இரவு!......

எழில் பொழியும் பூம்பொழில் ஒன்றில் இராஜகுரு நஞ்சநாதனும், மந்திரி விக்கிரமனும் உட்கார்ந்து குசு குசுவெனப் பேசிக்கொண்டிருந்தனர். மன்னரும் நானும் நிலவின்பத்தை அனுபவிக்க அப்பூம் பொழிலுக்குச் சென்றோம்.

"முதலில் அந்தப் பயலை ஒழித்துக் கட்ட வேண்டும்!..."—நஞ்சநாதனின் இக்குரல் கேட்டுப் பதுங்கிநின்றோம் இருவரும்.

"அப்பொழுதுதான் நமது திட்டங்களெல்லாம் கைகூடும்! அவன் மன்னின் ஆத்ம நண்பனாயிருக்கிறான். அவன்மீது மன்னருக்கு வெறுப்பை யுண்டு பண்ணி மன்னரிடமிருந்து அவனைப் பிரிக்கவேண்டும்! ஓவியந் தீட்டுகிறவனை, போர் வீரனைவிட மேலாக, மந்திரி பிரதானியர்களைவிட உயர்ந்தவனாகவா மன்னர் மதிப்பது?... இது கூடவே கூடாது! எப்படியாவது அவனை ஒழித்துக்கட்ட வேண்டும்! அப்பொழுதுதான் நம் திட்டங்கள் கைகூடும்!..."—நஞ்சநாதன் பேசிக்கொண்டே போனான்.

"என்ன, நஞ்சநாதரே!..."—மன்னர் அவனைக் கூப்பிட்டு முடிப்பதற்குள்,

"...என்று மதிவர்மபுரி மன்னரின் மைத்துனன் சதித்திட்டம் தீட்டினான்..." என்று பக்குவமாகப் பேச்சை மாற்றினான் பூசுரன்.

"ம்... அப்புறம்?..."—இது விக்ரமன்!

ஆம். பரிவின்பா!.....அவ்வளவு நேரமாக விக்ரமனிடம் தான் கூறிக்கொண்டிருந்ததை ஒரு நாட்டின் கதையாக மாற்றிவிட்டான் ஆதிக்கவாதி! விக்கிரமன் வகையாக "உம்" கொட்டினான்!

"இன்பதாசா!...நாம்தான் தவறாக எண்ணிவிட்டோம்! கதை சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்!" என்றார் மன்னர். நான் ஒன்றும் பதில் பேசவில்லை. எனக்கு அன்றே தெரியும்!—அவர்களிருவரும் என்னை அழிக்கத் திட்டம் தீட்டுகிறார்களென்று.

"நம் திட்டங்கள்" என்று அவர்கள் கூறிக்கொண்டிருந்த காட்சி என் கண்முன் மறையாது மீண்டும் மீண்டும் தோன்றிக் கொண்டேயிருந்தது. அந்தத் திட்டங்கள் எவையாயிருக்கலாமென்பதை எண்ணிப் பார்த்துக் கொண்டிருப்பதே என் வேலையாகிவிட்டது. என் மனத்தில் துளியும் நிம்மதிகிடையாது!...

* * *

நடுநிசி. நான் மன்னரிடம் வெகுநேரமாகப் பேசிக்கொண்டிருந்துவிட்டு, அவரிடம் விடைபெற்று வீடு திரும்பிக்கொண்டிருந்தேன். மந்திரி விக்கிரமனும் இராஜகுரு நஞ்சநாதனும் ஓர் மறைவிடத்திலே நின்று பேசிக்கொண்டிருந்தார்கள்.

"ஆம். இன்று அவனைத் தொலைத்துவிட்டால் நம் திட்டங்களை இனி விரைவில் நடத்த ஆரம்பித்துவிடலாம்!..."—இது இராஜகுரு.

"ஆமாம். ஒழியட்டும் அயோக்கியப்பயல் இன்றோடு!...ஓவியந்தீட்டுவதோடு நில்லாமல் வேந்தனின் உள்ளத்தையும் தீட்ட முனைந்த அற்பன் அழியட்டும்!....டேய்!...காளிமுத்து! வேலை ஜாக்கிரதையாக நடைபெற வேண்டும்!..." மந்திரி இங்ஙனம் பேசி அந்தப் பயங்கர மனிதனிடம் — கொலையாளியிடம் ஒரு பண மூட்டையைக் கொடுத்தான்.

நான் விரைவாக அரண்மனை நோக்கி நடந்தேன். மன்னரிடம் விஷயங்களை அறிவித்தேன். சில வீரர்களுடன் அவரே என் வீடு வந்தார். அனைவரும் பதுங்கிக்கொண்

டோம். என் படுக்கையில், துணி யால் ஒரு உருவம் செய்து, அதன் மீது போர்வை பொன்றைப் போர்த்தி, அதைவைத்துவிட்டோம். சிறிது நேரங்கழிந்ததும் கொலையாளி வந்தான். படுக்கையை நெருங்கினன். ஓங்கி ஒரு குத்து குத்தினன். வீரர்கள் அவனைப் பிடித்துக் கொண்டனர்!

"அய்யோ! பாதகா! நீ ஒரு ஓவியனா!...உன் பேச்சைக் கேட்டு மன்னரைக் கொன்று விட்டேனே! —பணத்தாசையால்!..." என்று அக்கொலையாளி என்னைப் பார்த்துக் கடூரமாகப் பேசினன். திகைத்துப் போனேன் நான்! மன்னரை நான் என் வீடு அழைத்து வருவதாகவும், அவரைக் கொலை செய்ய அவனை நான் வரச் சொன்னதாகவும் அவன் சாதித்தான்!—பொய் புரைத்தான்! எனக்கு என்ன செய்வதென்று தோன்றவில்லை! உடலில் ஒரே நடுக்கம்! வியர்வை முத்து முத்தாகக் கொட்ட ஆரம்பித்தது!

"அய்யோ! இது அநியாயம்!..." கண்ணீர் சிந்திக் கத்தினேன்!

"அத்தான்! என்ன அது?...... கனவு கண்டீர்களா?..." என் அருகில் படுத்திருந்த அன்பு மனைவி வேணி கேட்டாள்!

ஆமாம். வேணி! கனவுதான் கண்டேன்! பயங்கரமானதொரு கனவு!..." என்றேன்!...

நாட்கள் நகர்ந்து கொண்டிருந்தன. எனக்கு வாழ்க்கை இனிக்கவில்லை! ஓவியம் தீட்ட உட்கார்ந்தால் "நம் திட்டங்கள்!" என்று மந்திரியும், இராஜகுருவும் பேசிக்கொண்ட காட்சிதான் என் கண் முன் தோன்றும்.

"டேய் முட்டாளே! அரசரின் அன்பை வகையாகப் பெற்ற உலுத்தனே! ஓவியங்களால் வேந்தனின் உள்ளத்தைக் கலக்கிய உன்மத்தனே! இனி உன் ஜெபம் பலிக்காது! உன்னை ஒழிக்க—மன்னரிடமிருந்து உன்னைப் பிளக்கத் திட்டங்கள் தீட்டிவிட்டோம்!....இன்னும் சிறிது நாட்களில் அவை நடைமுறைக்கு வந்துவிடப்போகின்றன பார்!..."—நஞ்சநாதனும் விக்ரமனும் என் கண் முன் தோன்றி இப்படிப் பேசுவார்கள் உக்கிரமாக! உரத்த சத்தமிட்டுச் சிரிப்பார்கள்! எனக்கு உபத்திரவமளிப்பார்கள்!

ஓவியக்கோலை எடுத்துக்கொண்டு ஓவியம் தீட்ட உட்கார்ந்தால் முன் போல என் கை வேகமாக வேலை செய்வது கிடையாது! நடுக்கமும் உதறலும் என்னைப் பற்றிக்கொண்டிருந்தன! ஓவியங்கள் தீட்டமாட்டேன்! போய்ப்படுத்துக் கொள்வேன்! என் கண் முன்னே மறுபடியும் நஞ்சநாதனும் விக்கிரமனும் தோன்றி, "எங்கள் திட்டங்கள்!" என்று கத்துவார்கள்! என் கழுத்தை நெறிப்பார்கள்! கண்ணை மூடினாலும் அவர்கள் உருவம் மறைவது கிடையாது! கண்ணயர்ந்தால் கனவுலகிற்கும் ஓடிவருவார்கள் அக்கயவர்கள்!......'வெற்றி! வெற்றி! நிச்சயம் எங்களுக்கு வெற்றி!...வஞ்சகம் எங்கள் வில்! சூழ்ச்சி, நாங்கள் சுழற்றப்போகும் வாள்! சூதிடம் நீதி நிற்கமுடியாது! நியாயம், கயவஞ்சகம் என்னும் நெருப்பையணுகமுடியாது! சூழ்ச்சிக்காரர்களுக்கு வீழ்ச்சியென்பது கிடையாது!......பார்! இதை விளக்கிக் காட்டுகிறோம்!..." என்று கனல்கக்கிக் கொக்கரிப்பார்கள்! நான், ',அய்யோ,, இது அநியாயம்!', என்றலறுவேன்!......

இப்படிக் கழிந்த தினங்கள் பல!...

ஏழாம் பகுதி

இரு சக்கரங்கள்!

மகிழ்ச்சிகரமான செய்தி! மன்னர் பூரித்துப் புளகாங்கிதமடைந்து கொண்டிருந்தார்! மக்கள் மகிழ்ச்சி வெள்ளத்தில் தவழ்ந்துகொண்டிருந்தார்கள்! ஆம் அன்று முல்லையின் மேனிக்கு மகிழ்ச்சி மெருகு கொடுக்கப்பட்டிருந்தது!....நாடெங்கும் ஒரு நற்செய்தி பேசப்படுகிறது! அரண்மனை அழகாக அலங்கரிக்கப்பட்டிருக்கிறது! வாத்திய ஒலிகள் விண்ணைப் பிளக்க முழங்குகின்றன! மக்கள் திரள்திரளாக அரண்மனைக்கு எதிரில் நின்றுகொண்டிருக்கிறார்கள்! "முல்லை நாட்டின் இளவரசர் வாழ்க!" என்ற வாழ்த்துக் குரல்கள் ஓயாது ஒலித்துக்கொண்டிருக்கின்றன! ஆம் முல்லையின் இளவரசர் பிறந்தார் அன்று! முல்லையின் நாடு, நகரம், பட்டி, தொட்டி, மூலைமுடுக்குகளிளெல்லாம் கூட மக்கள் தோரணங்களைத் தங்கள் வீடுகளில் கட்டி, வானவேடிக்கைகள் நடத்திக்கொண்டிருந்தனர்!

தங்கத் தொட்டிலிலே பட்டுப் பீதாம்பரங்களின்மீது படுத்துக்கொண்டிருந்தார் இளவரசர். அரசியார் தன் தங்கப்பதுமையைப் பார்த்துப் பூரித்துக்கொண்டிருந்தார். தோழியர் பலர் அங்குமிங்கும் ஓடி அலைந்து பணிபுரிந்து கொண்டிருந்தனர்! அதோடு இராணியைப் புகழ்ந்துகொண்டும், கேலிசெய்துகொண்டும் இருந்தனர்.

அன்று இரவு!

ஆம், அன்றிரவு ஓர் சூழ்ச்சிக்காரனின் சதித் திட்டம் ஒன்று நிறைவேறியது! அச் சூழ்ச்சிக்காரன் யாரென்பது இன்றுவரை ஒருவருக்கும் தெரியாது, பரிவின்பா!...

அடுத்தநாட் காலை!...நாடெங்கும் ஒரே பேச்சு! ஏக ஒப்பாரி! "இளவரசரைக் காணோம்!..." மக்கள் முகத்திலே துக்கக் கிரல்கள்! மன்னர் சித்தம் சோர்ந்து போனார். இராணியால் அவ்வேதனையினைச் சகிக்க முடியவில்லை? இமைகள் வீங்குமளவு விம்மிவிம்மி அழுதார்! மூர்ச்சையாகிவிட்டார்!...

குழந்தையைத் தேட நாறு புறங்களிலும் வீரர்கள் சென்றவண்ணமிருந்தனர்!...

நற்செய்தி!...

"இளவரசர் கண்டுபிடிக்கப்பட்டார்!" இச்செய்தி கேட்டு முல்லை மக்கள் மகிழ்ச்சிக் கூத்தாடினர்!

ஆம். முல்லையின் வருங்கால மன்னர், காடொன்றில் ஒரு கொன்றை மரத்தடியில் கிடத்தப்பட்டிருந்தார்!...அவரை எடுத்துச் சென்று காட்டில் விட்டவன் யாரென்பது ஒரு புரியாதபுதிராகவே இருக்கது!—இருந்து வருகிறது!...

விழிகளையிழந்த அந்தகன் ஒருவன் மீண்டும் பார்வையைப் பெற்றால் அடையும் பூரிப்பு—ஏழை ஒருவன் தன் வியர்வையையும், உதிரத்தையும் வடித்துச் சம்பாதித்துப் பெற்ற சிறு தொகையைக் கள்வரிடம் பறிகொடுத்துவிட்டுப் பின் அதை அடைந்தால் கொள்ளும் ஆனந்தம்!... ஆகியவை போன்ற ஆனந்தங்களெல்லாம், அரசர், இளவரசர் மீண்டும் கிடைக்கப்பெற்ற பொழுது அடைந்த ஆனந்தத்தை

(15-ம் பக்கம் பார்க்க)

போர்வாள்

சென்னை 8—9—51 சனிக்கிழமை

தோல்விக் காண்டம்!

இன்னொரு படலம்!

★

"தொட்டது துலங்காத் துரைமகனார்கள்" என்று, காங்கிரஸ் கண்ணியவான்களுக்கு, புதிய பட்டாபிஷேகம் செய்துள்ளார் வடநாட்டுப் பத்திரிகாசிரியர் ஒருவர்.

அந்தப் பட்டம் காங்கிரஸ் கட்சியினருக்கு மிகவும் பொருத்தமானதுதான் என்பதை எவரும் மறக்கமுடியாது.

உண்மையிலேயே, அவர்கள், இந்த நாட்டில் தொட்டது எதுவும் துலங்கியதில்லை.

அவர்கள் நடமாடவிட்ட இலட்சியங்களில் எதுவும் வெற்றி பெற்றதில்லை.

அவர்கள் எழுப்பிய முழக்கங்களில் எதுவும் நிலைத்து நின்றதில்லை.

அவர்கள் கட்டிய கோட்டைகள் எவையும் சரிந்துவிழாமல் இருந்தது கிடையாது.

கதர்—கதர் என்று காடுமேடெல்லாம் சென்று கதறினார்கள் அந்தக் கண்ணியவான்கள். ஆனால் கதர், அவர்கள் கண்முன்னாலேயே கல்லறைக்குள் புகுந்துவிட்டது.

"ஆடு ராட்டே — சுழன்று ஆடுராட்டே—சுழன்று சுழன்று நீ நித்தம் ஆடுராட்டே" என்று ஊரெங்கும் சென்று உரத்த குரலில் கீதம் இசைத்துவந்தார்கள். ஆனால் ராட்டை, இன்று, காங்கிரஸ் அமைச்சர்களாலேகூட சிந்தப்படாமல் "ஓ"வென்று ஒதுக்கித் தள்ளப்பட்டுவிட்டது.

"இயந்திரங்கள் பாவத்தின் சின்னங்கள். இயந்திர நாகரிகம் சைத்தான் நாகரிகம். ஒழித்தே தீரவேண்டும் இயந்திர சகாப்தத்தை" என்று மேடைதோறும் ஏறி மேதினியெல்லாம் கேட்கும்படி முழக்கமிட்டார்கள். ஆனால் இன்று காங்கிரஸ் தலைவர்களே புதிய புதிய இயந்திரத் தொழிற்சாலைகளை நித்தம் நித்தம் துவக்கிவைத்தபடி இருக்கிறார்கள்.

"அன்னக்காவடிகளும், அன்றாடங்காய்ச்சிகளும், தரித்திர நாராயணர்களும், வறுமையால் வாடுவோரும் உலவிடும் நாடல்லவா இது? இந்த நாட்டின் கல்விச்சாலைகள் இலட்சக்கணக்கான ரூபாய்களின் மீது எழுப்பப்பட்ட மகத்தான மாளிகைகளாக இருப்பதா? கூடாது கூடாது! ஆலமரத்தடியிலே, அரசமரத்தோரத்திலே, பரந்த புல் வெளியிலே, இயற்கையோடு இணைந்த முறையிலே கல்வி புகட்டப்பட்டால் போதும்—அத்தகைய கல்வி முறைதான் பாரத நாட்டுப் பண்பாட்டிற்கு ஏற்றது" என்று, முன்பெல்லாம், தேசியவாதிகள் பேசாத நாளில்லை — வாடாத வேளையில்லை. ஆனால் இன்று? உங்கள் கிராமத்திற்குப் பள்ளிக்கூடம் தேவையா? 60,000 ரூபாயில் ஒரு கட்டிடம் கட்டிக்கொடுங்கள் — பிறகு துவக்குகிறோம் கல்விக் கூடத்தை என்கிறார்கள் காங்கிரஸ் அமைச்சர்கள்.

ஆம்! கதர்—கைராட்டை—கைக்குத்தரிசி—பர்ணசாலை நாகரிகம்—குருகுலக் கல்வி—ஆலமரத்தடிப் பள்ளி — பனை ஓலை வரவேற்பு என்று, என்னென்ன இலட்சியங்களை, தேசியவாதிகள், இந்தியாவுக்கு விடுதலை கிடைப்பதற்கு முன்னாள் வரையிலே பேசிவந்தார்களோ, இந்த இலட்சியங்கள் அத்தனையும் இந்நாளில் தூள்தூளாகிவிட்டன.

அந்த இலட்சியங்கள் அத்தனையும் தூளாகிவிட்டன என்பது மட்டுமல்ல கவனிக்கப்பட வேண்டிய உண்மை! அந்த இலட்சியங்களைத் தூள்தூளாக்கியவர்கள் வேறு யாருமல்ல—காங்கிரஸ் வாதிகளேதான் என்பதையும் நம் கவனத்தில் வைத்துப் பார்த்தால்தான் காங்கிரஸ் வாதிகள் பெற்றுள்ள தோல்வி எவ்வளவு மகத்தானது என்பதை நாம் நன்கு உணரமுடியும்.

கதர்—கைராட்டை — கைக்குத்தரிசி—குருகுலக் கல்வி என்றெல்லாம் பேசிவந்ததைப் போலத்தான் காங்கிரஸ் வாதி

கள் கிராம வாழ்க்கையைப்பற்றி யும் பேசிவந்தார்கள்.

இந்தியாவின் ஆத்மா கிராமங்களில்தான் உலவுகிறது என்று ஆத்மீகப் பாஷையில் பேசிவந்தார்கள் சிலசமயம்.

பாரதகண்டத்தின் இருதயம் இருக்கிறதே அதன் பெயர்தான் கிராமம் என்று விஞ்ஞான நடையில் பேசிவந்தார்கள் சிலசமயம்.

காணும் இடம் எங்கும் கை புனைந்து இயற்றாக் கவின் பெறு வனப்புகள் நிறைந்துள்ள கிராம வாழ்க்கையின் சிறப்புதான் என்னே என்னே என்று பண்டித நடையைக் கையாண்டு பார்த்தார்கள் வேறு சிலசமயம்.

"மகாத்மாவைப் பாருங்கள் — அசல் கிராமவாசியைப் போலவே இல்லையா — இதன் பொருள் என்ன—கூர்ந்து கவனியுங்கள் —கிராமத்தின் சிறப்பு புலனாக வில்லையா?" என்று உத்தமர் காந்தியாரின் உருவத்தைச் சாட்சிக்கழைத்து 'காந்தி வாதம்' புரிந்து பார்த்தார்கள் இன்னும் சில சமயம்.

ஆனால், எல்லாச் சமயங்களிலுமே, "நாங்கள், நவநாகரிகத்தின் சின்னங்கள்—நாசகாலபிம்பங்கள்—நம்மால் வெறுக்கப்பட வேண்டிய விபரீத வட்டாரங்கள்'' என்னும் சொற்களை ஓயாமல் கூறி வந்தார்கள்.

நகரங்களைத் துறந்துவிட்டு, மக்களெல்லாம் காட்டுப் புறங்களுக்குக் குடியேறினால்தான், இந்தியா, இன்பபுரிப் பயணம் செய்யமுடியும் என்பதை வேலை தவறாமல் வலியுறுத்தி வந்தார்கள்.

படித்தவர்கள் எல்லோரும் வாரத்தில் ஒரு நாளாவது கிராமங்களுக்குச் சென்று கிராமவாசிகளோடு தங்கியிருக்க வேண்டும் என்று தங்கள் ஏடு

(13-ம் பக்கம் பார்க்க)

இளஞ்செழியன்—சுந்தராம்பாள் திருமண அழைப்பிதழ்

அன்புடையீர்,

நிகழும் கர ஆண்டு ஆவணித் திங்கள் 27-ம் நாள் [12—9—51] புதன்கிழமை காலை 9 மணிக்கு என் முதல் மகனும், "போர்வாள்'' ஆசிரியருமாகிய செல்வன் மா. இளஞ்செழியன் பி. ஏ. (ஆனர்ஸ்) அவர்களுக்கும், காஞ்சிபுரம் நூல் வணிகர் திருவாளர் வே. குப்புசாமி அவர்களின் மகள் செல்வி சுந்தராம்பாள் அவர்களுக்கும், திருவாளர் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ. அவர்கள் தலைமையில் சென்னை அரண்மனைக்காரன் தெருவில் உள்ள கோகலே மண்டபத்தில் திருமணமும், அதே இடத்தில் அன்று மாலை 4-30-மணிக்குப் பாராட்டுக் கூட்டமும் இன்னிசை விருந்தும் நடைபெறும். இரண்டு நிகழ்ச்சிகளிலும் தாங்கள் தவறாமல் வந்து கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்துமாறு வேண்டுகின்றேன்.

தங்கள் அன்புள்ள
காஞ்சி மணிமொழியார்

நிகழ்ச்சி நிரல்

12—9—51 புதன்கிழமை

வாழ்க்கை ஒப்பந்தம்
நேரம்: காலை 9-மணி
தலைவர்:
இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.,
சொற்பொழிவாளர்கள்:
மு. கருணாநிதி, கா. அப்பாதுரை, எம்.ஏ.எல்டி., காஞ்சி கல்யாணசுந்தரம், நடிப்புப் புலவர் கே. ஆர். ராமசாமி, சத்தியவாணிமுத்து அம்மையார்.

பாராட்டுக் கூட்டமும் இன்னிசையும்
நேரம்: மாலை 4-30 மணி
தலைவர்:
க. அன்பழகன் எம். ஏ.
சொற்பொழிவாளர்கள்:
அறிஞர் அண்ணாதுரை
புலவர் மயிலை சிவமுத்து
கே. ஏ. மதியழகன்
என். வி. நடராசன்
இன்னிசை
இசைச் செல்வி ஜி. கஸ்தூரி அம்மையார்
இன்னிசை வேந்தர் ஆ. விநாயகனார்

தேய்ந்துபோன திராவிடம்!

[காதலழகன்—பெரியகுளம்]

நம் நாடு எது? என்று வினா எழுப்பினால் இந்தியா என்றுதான் பலர் இயம்புவர். அது அவர்களுடைய குற்றமல்ல. அவ்வித நிலைமைக்கு நம்மை, திராவிட இனத்தவரை, நாடியிலே முறுக்கில்லாத ஒரு இனம் கொண்டு வந்து விட்டது.

இந்தியா என்பது நாடல்ல, அது ஒரு துணைக் கண்டம் என்று வரலாற்று விற்பன்னர்கள் வரையறுத்துக் கூறியுள்ளனர். அத்துணைக் கண்டத்தின் தென்பகுதியே நாம் வாழும் திராவிட நாடாகும்.

"சூழும் தென்கடல் ஆடும் குமரி
[தொடரும்
வடபால் அடல்சேர் வங்கம்
ஆழும் கடல்கள் கிழக்குமேற்காய்"

என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பாடினாரே அதுதான் நமது நாடு; நம்மைப் பெற்றெடுத்த பைந்தமிழ் நாடு; பசும் பொன்னாடு.

ஆனால் இன்று—

பகுத்தறிவைப் பறிகொடுத்த நாடு; பராரிகள் நிறைந்த நாடு; பார்ப்பனரைக் கும்பிடும் நாடு; பாழாய்ப்போன நாடு; பனியாவும் பிர்லாவும், டாட்டாவும் பொருள் வேட்டையாடும் நாடு; தீயரின் கூட்டுறவால் தேய்ந்துபோன திராவிட நாடு.

பல நூற்றாண்டுகளுக்கு முன்பு

மணிமுடி தரித்த மன்னர்கள் நம்மை ஆண்டனர். அவர்கள் காலத்தே முக் கழகங்கள் தோன்றின. இயல், இசை, கூத்து என நம் இன்பத் தமிழ் அரசோச்சின. மக்கள் வாழ்க்கை முறைபற்றி இலக்கியங்கள் பல வகுக்கப்பட்டுத் தொகுக்கப்பட்டன. எழில் தவழும் இயற்கைபற்றியும் இலக்கியங்கள் படைக்கப்பட்டன. இலக்கண நூல்கள் பலவும் உண்டாக்கப்பட்டன. புலவர் கோமான்கள் சாசுவதமான இலக்கியங்களை சங்கங்களிலே படைத்தனரே யொழிய கால வெள்ளத்தில் சாய்ந்திடும் ஏடுதனை இயற்றவில்லை.

'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்'' என்ற உயர்ந்த நெறியிலே திராவிடர்கள் வாழ்ந்தனர்.

திராவிட வணிகர்கள் ''திரைகடலோடியும் திரவியம் தேடு'' என்று ஏதி கூறியதை மெய்ப்பிக்க அதாவது நாட்டினர் நன்கு உணர நாவாய் ஏறி நீலக்கடல் வழியே நெடுந்தொலைவிலுள்ள பல நாடுகளுக்குச் சென்றனர். இன்று கூறுகிறார்களே பரந்த நோக்கங் கொண்ட பாரத புத்திரர்கள், வடநாடு செல்ல வேண்டுமெனில் இந்தியும், மேல் நாடு போக வேண்டுமெனில் ஆங்கிலமும் அவசியம் என்று. அந்த முறையிலே அவர்கள் பிறமொழி கற்றுத் தேர்ந்து பாய்மரம் ஏறவில்லை. பிறந்த நாட்டு மொழியான தமிழைக் கற்றே திராவிடர்கள் வாணிபம் நடத்தினர். திராவிடத்தின் தேக்கும், சந்தனமும், ஏலமும், மிளகும் ரோமிலிருந்து சாவகம்வரை சுமந்தது, பவளமும், முத்தும், பொன்னும் பிறநாட்டுப் பெண்களை அழகுபடுத்தின ஆடவர்கள் கண்டு ஆசைப்படும்படி.

வாணிபத் துறையிலே மட்டுமன்று. வீரத்திலும் வியத்தகு செயல்கள் புரிந்ததும் திராவிடமே. தென்னாட்டு மன்னவரை இழித்தும் பழித்தும் பேசிய கனக, விசயன் என்னும் ஆரிய மன்னர்களின் தலையிலே கண்ணகிக்குச் சிலை வடிக்கக் கல்லினை ஏற்றிக்கொண்டு வந்தவன் சேரன் செங்குட்டுவன் என்னும் செம்மல். அன்னியர்கள் கடலில் அடியெடுத்து வைக்க அஞ்சிய அன்று, அலைகடலை அடக்கி நாவாய் செலுத்திக் கடாரம் வென்றவன் ராசராசசோழன். போக்குவரத்து வசதி இல்லாத அந்தக் காலத்தே போருக்குக் கிளம்பி வங்காளத்தையும், பீஹாரையும் வென்று கங்கை நதிக்கரை நாடுகளையும் தாள் பணிய வைத்தவன் ராசேந்திரன். அந்த வெற்றியின் நினைவுச் சின்னமாக கங்கை கொண்ட சோழபுரம் எனும் நகரையும் நிர்மாணித்தவன் அவனே.

ஆடவர்கள் மட்டுமல்ல, பெண்டிர்களும் வீரமுடன் வாழ்ந்தனர். மகன் புறமுதுகிட்டோடி மாண்டான் என்று கூறக்கேட்ட தாய், ரணகளத்திற்குப் பறந்தோடிப் பிணங்களைப் புரட்டிப் பார்த்தபோது, மகன் மார்பிலே அம்பு ஆழமாய்ப் பாய்ந்திருக்கக் கண்டு அக மிக மகிழ்ந்தாள். வீரவனிதையர்களுக்கு முதுகுடிப் பெண்கள் என்று சிறப்புப் பெயரும் வழங்கி மகிழ்ந்தவர்கள் அன்றைய திராவிடர்கள்.

வீரத்திலே மட்டும்தானா? வாழ்க்கை முறையிலும், வழிபாட்டு முறையிலும், இசை, ஓவியம், சிற்பம், கலை முதலிய எல்லாத் துறைகளிலும் திராவிடர்கள் சிறந்து விளங்கினர் அன்று! ஆனால் இன்று? திராவிடத்தின் வரலாறு சிதைந்த சிலையாகிவிட்டது. தேய்ந்த லாடமாகி விட்டது.

திராவிடத்தைப் பார்.

முக் கழகங்கள் தோன்றி மறைந்த நாட்டிலே ஹிந்துஸ்தானி பிரசார சபாக்கள். தமிழிசை தவழ்ந்த இடத்திலே தியாகய்யாவின் கீர்த்தனங்கள். செந்தமிழ் செங்கோல் செலுத்திய ஆட்சிப் பீடத்திலே ஆங்கிலம் ஆட்சி புரிகிறது. நாளடைவில் அதுவும் அகன்று இந்தி அமரப் போகிறது. இறைவன் இல்லம்—இறந்த பிணத்தை அடக்கம் செய்யும் இடம்—மணமேடை—மாணவர் பள்ளி இன்ன பிறவற்றிலே இறந்தமொழி (ஸமஸ்கிருதம்) பிறந்த பசுங்கன்று போல துள்ளி விளையாடுகிறது.

திருக்குறளை மறையென மக்கள் கொண்டாடிய திராவிடத்திலே தேவமொழியார் வகுத்த நான்கு வேதங்கள் நடமாடுகின்றன. சிலம்பு ஒலித்த திராவிடத்திலே ஐந்து பேருக்கும் மனைவியாகி ஆறுவது ஆடவன் மீதும் ஆசை கொண்ட அணங்கு துரௌபதியின் கதை வழங்கப்படுவது மட்டுமல்ல, தெய்வமாகவும் அவளை வைத்துக் கொண்டாடப் படுகின்றது. அகநானூறும், புறநானூறும் ஆண்ட திராவிடத்திலே ஆபாசம் நிறைந்த, ஆயிரமாயிரம் அணங்குகளின் கற்பை அழித்த ஆபத்பாந்தவனின் 'அற்புத லீலை'கள் பற்றிய கதாகாலக்ஷேபங்கள் நடைபெறுகின்றன. கலித்தொகை களிப்புடன் விளையாடிய திராவிடத்

திலே, தந்தையைக் கொன்று; தாயைப் புணர்ந்துவந்த தனயனுக்குக் காட்சி கொடுத்த தயாபரனின் திருவிளையாடல்கள் நடைபெறுகின்றன. அதிகமாகக் கூறுவானேன்—திராவிட மக்களின் உள்ளங்களிலே நறுமணம் தூவிக்கொண்டிருந்த தேன் சொட்டும் தமிழ்க்கலை மலர்கள் யாவும் ஆரியாவர்த்தத்தின் புயலால் அடித்துச் செல்லப்பட்டுவிட்டன.

ஒருவனே தேவன் என திராவிடர்கள் வழிபட்ட நாட்டிலே, மும்மூர்த்திகளை முப்பத்து முக்கோடி தேவர்கள் நாற்பத்தெண்ணாயிரம் சப்த ரிஷிகள்—கின்னரர்—கிம்புருடர்—அஷ்டதிக்குப் பாலகர்கள் இப்படிப் பலப்பல. அக்கடவுள்களுக்குக் குடும்பங்கள் பல; கூத்திகள் பல; வழிபாடுகள் பல; ஏடுகள் பல; விசித்திரமான உருவங்கள்—உள்ளங்கள் பல.

ஒன்றே குலம் என்று வாழ்ந்த திராவிடர்கள் இன்று வானத்திலே பூத்துக் கிடக்கும் நட்சத்திரங்கள் போல எண்ணத் தொலையாத சாதியினர்களாகப் பிரிந்து விட்டனர். ஒவ்வொரு சாதிக்கும் தனித்தனி கடவுள்கள், சாத்திரங்கள்; வழிபாடுகள்; வாழ்க்கை முறைகள் எண்ணிலடங்கா.

பெருமையுடனும், பெருமிதத்துடனும் வாழ்ந்த திராவிட மக்களை இவ்வாறு பிரித்துவைத்து, "உன்னைப் பார்த்தால் பாபம்; தொட்டால் தீட்டு; நினைத்தால் நீசத்தனம்" என்று ஆரியபுரியினர் ஆர்ப்பரிக்கின்றனர்.

அம்மட்டோ?

யானைக் கூட்டத்தினிடையே நுழைந்து வீரவாளேந்தி அருஞ்சமர் புரிந்த திராவிடர்கள்—எதிரியின் ஈட்டிமுனையின் ஒளி கண்டு இமை கொட்டியவன் பேடி என்று சொல்லிய திராவிடர்கள் புல்லேந்திகளைக் கண்டால் காலில் வீழ்வதும், பூனையைப் பார்த்தால் வீட்டில் நுழைவதுமான இழிநிலைக்கு ஆளாகி விட்டனர்.

'இல்லற மல்லது நல்லறமன்று" என்று வாழ்ந்த திராவிடர்கள் "வாழ்வாவது மாயம்," "காயமே இது பொய்யடா," "காண்பதெல்லாம் அநித்யமடா" என்று அவலப்பாட்டுப் பாடுகின்றனர் சிந்தனை சிறிதும் இன்றி.

பெண்ணை வாழ்க்கைத் துணைவியாகக் கொண்டு வாழ்க்கை நடத்திய திராவிடர்கள், "பெண்ணென்றால் மாயப் பிசாசடா," "சேலை கட்டிய மாதரை நம்பாதே" என்று சலிப்புச் சிந்து இசைக்கின்றனர்.

காதல் மணம் புரிந்து களிப்புடன் வாழ்ந்த திராவிடர்கள் வைதீக மணம் புரிந்து வாழ்வின் சுவையை இழந்து வாடுகின்றனர்.

"தெய்வத்தால் ஆகாதெனினும் முயற்சி மெய் வருந்தக் கூலி தரும்" என்று வீரமுடன் பேசிய திராவிடர்கள், "எல்லாம் அவன் செயல்" "அவனன்றி ஓரணுவும் அசையாது," "விதி வலிது, வெல்வது அரிது" என்று புலம்புகின்றனர்.

வேறு எங்குமல்ல
தேய்ந்துபோன திராவிடத்திலே

கார்முகில் கூந்தல்—கருங்குவளைக் கண்கள்—கோவை இதழ்கள் முத்துப் பற்கள்—மோகனப் புன்னகை—சிற்றிடை—சிவந்த மேனி—கன்னல் மொழியாள். அவளருகே கையில் தோலுடன் ஒருவன் நிற்கிறான் மன்னர்கள் பவனிவந்த வீதியிலே. அக்குருடன் அவளது ஆசைக் காதலனா? இல்லை. அருமையாகப் பெற்றெடுத்து வளர்த்தும் பெண்ணைப்பார்க்கமுடியாது பரிதவிக்கும் அவளது தகப்பன். மக்கள் கடமாடிக்கொண்டிருக்கும் வீதியோரம் அவன் ஏன் நிற்கிறான்? வேறொன்றுமில்லை. அரைவயிற்றுக் கஞ்சிக்கு மகளைப் பாடச்சொல்லி, "அம்மா சோறு போடுங்க. நீங்க நல்லா யிருப்பீங்க" என்று சோகக் குரலிலே 'வாழ்த்து'க் கூறி நிற்கிறான். வீட்டுக்கார எசமான் வேடிக்கை பார்க்கிறார். வீதிவழி செல்லும் வாலிபர்கள் நின்று பார்க்கின்றனர் பரவசமுடன். குருடனை அல்ல—குயில் போல் பாடிடும் குமரியின் அழகை, அங்க அமைப்புகளை.

* * *

மூலையிலே முக்காடிட்ட வண்ணம் இளவயது மங்கை உள்ளாள் வேதனை தோய்ந்த உள்ளத்துடன். அறிவு கெட்ட சமூகம் அவளுக்கு 'விதவை' நாமம் சூட்டிவிட்டது. வாழ்விழந்த வனிதையாகிவிட்டாள். ஆனால் வாலிப உணர்ச்சிகள் அவளிடத்தில் தோன்றாமலா இருக்கும்? தோன்றத்தான் செய்யும்—தோன்றியேதான் இருக்கும். உணர்ச்சியால் தூண்டப்பட்ட அத்தையல் தன்மேல் மையல் கொண்டவனைத் தழுவினாள்—யாரும் அறியாவண்ணம். சில திங்கள்கள் சென்றன. அவளது அடிவயிறு 'கனக்க' ஆரம்பித்துவிட்டது. இனி அவளால் மறைக்க முடியுமா? சமூகம் 'விதவை'ப் பட்டத்துடன் 'விபசாரி' பட்டமும் தந்துவிடும். அஞ்சினாள். அஞ்சிய அஞ்சுகம் நஞ்சு உட்கொள்ள நினைக்கிறாள். அப்போது அவளது அகக் கண்ணிலே தன் வயிற்றிலே உருவாகும் சிசுவின் எழிலோவியத்தைக் காண்கிறாள். வேதனை அடைகிறாள். வேல்விழிகளில் நீர்வழிகிறது பெருமூச்சு விடுகிறாள், சமூகத்துக்குப் பயந்து நஞ்சு உட்கொள்கிறாள், தனக்கல்ல—தன் வயிற்றிலே உருவாகப் போகும் குழந்தைக்கு.

வேறு பல 'விதவை'கள் சோரம் போய்க் கடைசியில் குழந்தைபிறந்ததும் குப்பை மேட்டிலோ, குளக்கரையிலோ, வயல் பக்கமோ, வாய்க்கால் ஓரமோ தூக்கி எறிகின்றனர். எறியுமுன் அவர்களது உள்ளம் துடிதுடிக்கும் நீரைவிட்டு நிலத்துக்கு வந்த மீன்போல. "கண்ணே! கள்ளத்தனமாக உன்னைப் பெற்றேன். உனது மழலை கேட்டு மகிழ, பாலூட்டித் தாலாட்டி வளர்க்க முடியாத மாபாவியாகிவிட்டேன். என் செய்வேன்! என் அருமைச் செல்வமே! மானத்துக்கு அஞ்சி, மதிகெட்ட சமூகத்துக்குப் பயந்து யாருமறியா வேளையிலே உன்னை இந்தப் பாழுந்தரையிலே போடுகிறேன், நீ மடிந்து போ" என்று புலம்பிச் செல்கின்றனர்.

மற்றும் பல பெண்கள் மனது பொறுக்காது குளங்களிலோ, கேணிகளிலோ, கயிறுகளிலோ தங்கள் உயிரைத் தந்துவிடுகின்றனர்.

* * *

வீதியிலே எச்சில் இலைகள் வந்து விழுகின்றன. விழுந்தடித்து ஓடுகிறான் பிச்சைக்காரச் சிறுவன். பக்கத்தே படுத்திருந்த குக்கல் வந்து குரைக்கிறது. பையனுக்கும் நாய்க்கும் போராட்டம் நடக்கிறது. பையன் கடிபடுகிறான். இந்த வேளையில் மற்றொரு நாய்

(14-ம் பக்கம் பார்க்க)

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

மாஜினியின் உயிரை உறிஞ்சி விட்டன! 1872—ம் ஆண்டு மாவீரன் மாஜினி இம்மாநிலத்திலிருந்து மறைந்தான்!

மாஜினியின் வரலாறு முடிந்து விட்டது! ஆனால் படித்தவர்களுடைய சிந்தனை முடியாது! மாஜினி விரும்பியிருந்தால் பட்டமும், பதவியும், பணமும் அவனைத்தேடி வந்திருக்கும்! ஆனால் அவன் அதை விரும்பவில்லை! நாட்டு விடுதலைக்கு போராடும் பாதை, காளான்களும் கள்ளிகளும், பயங்கரப் பள்ளங்களும் படு குழிகளும், சீறும் சிறுத்தைகளும், படமெடுத்தாடும் பாம்புகளும் நிறைந்த பாதையைவிடப் பயங்கரமானவை என்று தெரிந்துங்கூட அவன் அதிலே சென்றான்! ஏன்? சீசரின் கழுகுக் கொடியின் கீழ் சென்றவிடமெல்லாம் வெற்றிக் கொடி நாட்டி கீர்த்தி பாடிய ரோம் இன்று மாற்றானிடம் மண்டியிட்டுக் கிடக்கிறதே என்ற எண்ணம்தான் அதற்குக் காரணம்! ஆகவேதான் உரிமை வாழ்வுக்காகப் போராடினான்! தொல்லைகள் பல தொடர்ந்த போதிலும் சளைக்காது போராடினான்! கடைசி மூச்சு உள்ள வரை போராடினான்!

ஆகவே தோழர்களே! சற்றே சிந்தனையை செலவிடுங்கள்! பல்வேறு நாட்டு கடலலைகளை, நம் திராவிடத்தில் விளைந்த பொருள்கள் ஏற்றிய கலங்கள் முத்தமிட சிறப்போடு வாழ்ந்த நாம், இமயத்தில் விற்கொடி செதுக்கி வீரம் விளைவித்த நாம், சுதந்திரத்தோடு உரிமை வாழ்வு வாழ்ந்த நாம், இன்று எந்த நிலையிலே இருக்கிறோம் என்பதை எண்ணிப்பாருங்கள்! பேச்சுரிமை, எழுத்துரிமை, சமூக நீதி—இவை எந்த நிலையிலிருக்கின்றன என்பதை நினைத்துப் பாருங்கள்! திராவிடம் பெற்றெடுத்த மாணிக்கங்கள் மலேயாவிலும், பர்மாவிலும் தேய்ந்து ஓடாகின்ற நேரத்தில் இங்கு டாட்டாக்களும், பிர்லாக்களும் அரசாங்கத்தின் அனுமதியுடன் கொள்ளையடித்துக் கொழுப்பதைப் பாருங்கள்! கண்டிப்பாக உங்கள் உள்ளத்தில் தெளிவு பிறக்கும்! மாஜினியின் வாழ்வில் ஏற்பட்ட மாறுதலைவிட மகத்தான மாறுதல் உங்கள் வாழ்விலும் ஏற்படும்! பிறகு ஓடோடி வருவீர்கள், மேலே கருப்பும், கீழே சிகப்பும் பூசப்பட்டு பறக்கிறதே, அந்தக் கொடியின் கீழுள்ள பாசறை நோக்கி! அதோ குள்ளமான உருவத்துடன், ஆனால் நிமிர்ந்த நடையுடன் செல்லுகிறாரே, அவர்தான் அறிஞர் அண்ணா! அவரைப் படைத்தளபதியாகக் கொண்டு எழில்மிகு திராவிடத்தைப் பெற அணிவகுத்துச் செல்லும் படை வரிசையில் பங்கெடுக்க வருவீர்கள்! எங்கேயோ கிடந்ததுகளின் ஏசல், கயவாளிகளின் கல்லடி, ஜனநாயகப் போர்வையை போர்த்திக்கொண்டு பாசிசவெறி பிடித்தலையும் ஆட்சியாளரின் அடக்குமுறைகள், அதிகாரத்தின் கூர்மையான துப்பாக்கி முனைகள் — இவை யாவற்றையும் பொருட்படுத்தாது, "மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை, எம்மை மாட்ட நினைக்கும் சிறைச்சாலை" என்று வீரப்பண் பாடி தொண்டாற்றும் இலட்சிய ஏந்தல்களுடன் உழைக்க வருவீர்கள்! வாருங்கள்!! வெற்றி நமதே!!!

"போர்வாள்" வாசகர்கட்கு!

முக்கிய அறிவிப்புகள்

★

* சில எதிர்பாராத இடையூறுகள் காரணமாக, நாம் முன்னர் அறிவித்தபடி., "போர்வாள்" தி. மு. க. இரண்டாம் ஆண்டு மலர், அடுத்த வாரம் வெளிவராது. இதற்குப் பதிலாக, மாநில மாநாட்டின்போது, மாநில மாநாட்டு மலர், சிறந்த முறையில் வெளியிடப்படும்.

* நம் "போர்வாள்" ஆசிரியர் மா. இளஞ்செழியன் B. A. (Hons) அவர்களின் திருமணம், சென்னையில் அடுத்த வாரம் நடைபெறும் காரணத்தால் அடுத்தவார "போர்வாள்" இதழ் வெளிவராது. அதற்கடுத்த வாரம் 22—9—51 முதல், இதழ், வழக்கம்போல் வெளிவரும்.

அலுவலாளர்,

"போர்வாள்"

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

களிலெல்லாம் தீட்டிவந்தார்கள்.

பட்டதாரிகள் ஒவ்வொருவரும் பட்டம் பெறுவதற்குமுன் குறைந்தது ஓராண்டாவது கிராமப்புறங்களில் வசித்தாகவேண்டும் என்று மேடைகளில் வீரமுழக்கமிட்டுவந்தார்கள்.

கிராமங்களைத் துறந்து நகரங்களுக்கு வந்தவர்கள், நகரங்களைத் துறந்து கிராமங்களுக்கே சென்றுவிடவேண்டும் என்று "அன்பு யோசனை" கூறிவந்தார்கள்.

யோசனை கூறியது மட்டுமா— சில தலைவர்கள் கிராமங்களில் குடிசைகள் அமைத்துக்கொண்டு அங்கே வசிப்பது போல நாடகமாடியும் காட்டினார்கள்.

"குடிசைக் காட்சி" யோடு கூட நிற்கவில்லை! கிராமத்திற்குத் திரும்பிப் போ [Go back to the Villages] என்பதாகப் பெரியதோர் இயக்கத்தையேகூட நெடுங்காலம் நடத்திக் காட்டினார்கள்.

"ஆனால் முடிவு என்ன ஆயிற்று?" என்று கேட்கிறீர்களா?

என்ன ஆகும்?

கதர் பிரசாரத்தின் முடிவு என்ன ஆயிற்றோ—கைராட்டை விளம்பரத்தின் கதி என்ன ஆயிற்றோ—கைக்குத்தரிசி இயக்கம் என்ன ஆயிற்றோ — ஆலமரத்தடிக் கல்வி உபதேசம் என்ன ஆயிற்றோ — பனை ஓலை வரவேற்புத்தாள் பிரசாரம் என்ன ஆயிற்றோ—இயந்திரத்தால் செய்யப்பட்ட சர்க்கரை வேண்டாம், கையால் செய்த கருப்பட்டியே வேண்டும் என்ற இலட்சியகீதம் என்ன ஆயிற்றோ, அதுதான் ஆயிற்று இந்தத் துறையிலேயும்,

காங்கிரஸ் கட்சியின் தோல்விக் காண்டத்திலே இணைக்கப்படவேண்டிய மற்றொரு படலமாயிற்று, 'கிராமத்திற்குத் திரும்பிப் போ" என்ற இயக்கம்.

தொட்டது துலங்காத துரைமகனார்கள் காங்கிரஸ் கட்சியினர் என்னும் உண்மையை விளக்கும் இன்னொரு ஆதாரமாக மாறிற்று காங்கிரஸ் வாதிகளின் கிராம வாழ்க்கை உபதேசம்.

நகரவாழ்க்கையைத் துறந்து கிராம வாழ்க்கையை மேற்கொள்ளும்படி உபதேசம் புரிந்தனர் தேசியக் கட்சியினர்.

ஆனால் மக்களோ கிராம வாழ்க்கையைத் துறந்து நகர வாழ்க்கையை மேற்கொள்ளலாயினர்.

நாளுக்குநாள், கிராமங்களின் ஜனத்தொகை குறைந்து, நகரங்களின் மக்கட் தொகை கூடுதலாக மாறிற்று.

வாரத்திற்கு வாரம், கிராமப் பகுதிகளிலிருந்து, மக்கள், கும்பல் கும்பலாக நகரப் பகுதிகளை நோக்கிப் பயணம் தொடங்கலாயினர்.

மாதத்திற்கு மாதம், நகரசபைகளின் தண்ணீர் வசதி—ரோட் வசதி — வீட்டு வசதி முதலியவை நெருக்கடிக்குள்ளாக வேண்டிய நிலைமை கிராமங்களிலிருந்து நகரங்களுக்கு வந்து சேர்பவர்களால் உருவாகத் தொடங்கிற்று.

ஆண்டுக்கு ஆண்டு, அப்படிப் புதிதாக வந்து குடியேறியவர்கள் காரணமாக ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்த்துவைக்கவேண்டிய பொறுப்பு தீராத தலைவலியாக மாறிவிட்டது நகரசபை உறுப்பினர்களுக்கு.

காங்கிரஸ் வாதிகளின் 'கிராமத்திற்குப்போ" இயக்கம் பரிதாபகரமான தோல்வியை அடைந்திருக்கிறது — கிராமங்களைத் துறந்து, நகரங்களை நாடுவோர் தொகை, ஆயிரம் பதினாயிரம் என்று அல்ல, இலட்சம் கோடி என்று வளர்ந்துவந்திருக்கிறது.

'திராவிட நாடோ" "போர்வாளோ" அல்ல இதனைக் கண்டுபிடித்திருப்பது! சென்ஸஸ் என்று சொல்லப்படும் குடிமதிப்புக் கணக்கு இருக்கிறதே அது கண்டுபிடித்திருக்கிறது இந்த உண்மையை!

வெறிபிடித்த வெள்ளையர்கள் நாடாண்ட காலத்தில் எடுக்கப்பட்ட சென்ஸஸ் அல்ல—கண்ணியமே உருவாகிவந்துள்ள காங்கிரஸ் கனதனவான்கள் ஆட்சிக் காலத்து சென்ஸஸ்தான் கண்டுபிடித்திருக்கிறது இந்த உண்மையை.

1951 தொடக்கத்தில் "நம்ம சர்க்காரால்" எடுக்கப்பட்ட "நம்ம சென்சஸ்" இருக்கிறதல்லவா அதிலேதான் இருக்கிறது இந்த உண்மை

சென்ற பத்து ஆண்டுகளில் இந்தியாவின் மொத்த மக்கள் தொகை 100-க்குப் 14 விதம் உயர்ந்திருக்கிறதாம். ஆனால்,

(16-ம் பக்கம் பார்க்க)

"போர்வாள்"

சந்தா விவரம்

★

ஓராண்டு	ரூ. 6 8 0
6 மாதம்	ரூ. 3 4 0

போர்வாள் அலுவலகம்

பவழக்காரத் தெரு,

சென்னை 1.

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

நாக்கைத் தொங்கவிட்டுக் கொண்டே ஓடி வருகிறது, பையனுக்கு நியாயம் தீர்ப்பது போல். பிறகு இரு நாய்களுக்கும் போர். சிறுவனது கைகளில் செங்குருதி வழிகிறது. பார்த்துப் பரிதாபப் படுபவரோ, பரிகாரம் செய்பவரோ யாரையும் காணோம்.

* * *

அதோ, மெருகு குலையாத மோட்டாரிலே உல்லாசச் சீமான் செல்லுகிறார், ஒய்யாரியின் வீட்டிற்கு. மோட்டார் வீட்டை அடைகிறது. கனவான் இறங்குகிறார் காரை விட்டு. கால் இழந்த பிச்சைக்காரன், "ஐயா, காசு போடுங்க" என்று தனது 'திருவோட்'டை நீட்டுகிறான். சினம் மேலிட்ட சீமான் செருப்புக் காலால் அவனை எட்டி உதைத்து விட்டுச் சிங்காரியின் வீட்டிற்குள் நுழைகிறார். உதைபட்ட நொண்டி மூர்ச்சையாகிக் கீழே சாய்கிறான். இதைப்பார்த்துக் கண்டிக்க—தண்டிக்க எவரும் முன்வரக் காணோம். பணத்திற்கு அவ்வளவு 'மேன்மை' போலும்.

* * *

கள்ள மார்க்கெட்டிலே கொள்ளை லாபம் அடிக்கிறான் ஒரு கயவன். வெளி உலகு தன்னைத் தூற்றாதிருக்க வெள்ளி ரிஷபம் செய்து வைக்கிறான் விடையனுக்கு. கோவில் குருக்களும், கூடியிருக்கும் பக்தர் குழாமும் அந்த வியாபாரியைப் பாராட்டுகின்றனர். பகவானுக்குக் கொடுக்கப்பட்ட பூசைப் பொருள்களை வியாபாரிக்கு அளித்துப் பெருமைப் படுத்துகின்றனர். கடவுளுக்குச் செய்த 'திருப்பணி'யால் தம் கள்ள வாணிபம் மறைக்கப்பட்டது கண்டு வியாபாரி மகிழ்கிறார். கடவுளுக்குக்கூட லஞ்சம் தரவேண்டும் போலும்.

* * *

வயோதிகன்—வயது நாற்பதாகும்—நிதி மிகுந்தவன். ஆனால் மதி மங்கியவன். கட்டிய மனைவிகள் மூவரும் கால வெள்ளத்தில் மூழ்கிவிட்டனர். காமம் தணியவில்லை அவனுக்கு. வழியில் செல்லும் இளம் வனிதையர்மீது தன் விழியைச் செலுத்துகிறான் வேட்கை தணியுமா வென்று. விழ்பவர் யாருமில்லை. வேதனை அடைகிறான், வாடி வதங்குகிறான் வற்றல் போல. காலம் அல்ல பணம் அவனுக்கு அனுகூலம் செய்கிறது. அவன் உறவினர்களில் பராரி ஒருவன் தன் பெண்ணை ஒருவரும் மணக்காததால் அவனிடம் ஒப்படைக்கிறான். பிறகு அந்த ஏழை இறந்து போகிறான். பச்சிளம் பாவை தனது பத்தினியானாள் என்று அந்தப் பணக்காரன் பரவசமடைகிறான். 'பூனையிடம் அகப்பட்ட கிளிபோல' ஆகிவிடுகிறாள் அக்கிளி மொழியாள். அவள் உள்ளம் உடைகிறது. முடிவில் மரணபுரி நோக்கிச் சென்றுவிடுகிறாள். வயோதிகன் வாடுகிறான் காமப் பசியால்.

* * *

நடன ராணி—நாகரிக ரமணி. நாட்டியம் ஆடுகிறாள். அவள் தன் உடலை விற்கும் ஒய்யாரி. தன்னை நாடி வீடு தேடி வரும் 'தசைப் பசி'க்காரர்களை தன் வேல் விழியால் மயக்கி விழவைப்பாள். வளையல் ஒலியால் அவர்களை வணங்க வைப்பாள். மொழியால் மோகம் மூட்டுவாள். மார்பு காட்டி மயக்குவாள். கொடி இடையைக் காட்டி உள்ளம் துடிதுடிக்கச் செய்வாள். வந்த வாலிபன் அவளது வெறிபாட்டத்தில் சொக்கிப்போய் பஞ்சணையில் கிடப்பான். உடனே அவள் அவனை இன்பபுரிக்கு அழைத்துச் செல்வாள். மறுகணம் அவனிடம் வர்து குவியும் அவன் கொண்டுவந்த செல்வங்கள். இது அவளது நித்திய வாழ்க்கை.

* * *

உடையோ காவி, உள்ளமோ கபடம்—காமம். பேசுவதோ உலகம் மாயை என்ற வரட்டு வேதாந்தம். கையில் கசக்குவதோ கடவுள் பெயரைச் சொல்லி கஞ்சா. கையில் பிடிப்பதோ தண்டு கமண்டலம். கண்மூடி மௌனி போல வேடமிட்டு, கனவான்களை மயக்கிக் காசு பறிப்பது அவரது நித்திய கருமம். காலம் தள்ளுவதோ விலை மாதர்களிடம். பகலில் பரலோகத்தைப் பற்றிய பேச்சு. இரவிலே கண்ணன் காட்டிய 'வழிகள்'.

* * *

அதோ மதகுரு செல்லுகிறார் பட்டுப் பீதாம்பரம் அணிந்துகொண்டு, மகேஸ்வரனின் பிரதிநிதி; மதத்துக்கு அதிபதி. நடந்து செல்லுகிறாரோ? அல்லது நவீன வண்டியில் செல்லுகிறாரோ? அதுதான் அவருக்குப் பிடிக்காதே. அன்பே வடிவானவர், ஆண்டவனின் திவ்ய நாமத்தையே பூஜிப்பவர், கருணை வடியும் கண்ணுளார், காணப்பேராளர், காமத்தை 'வென்றவர்,' காலத்தையும் அதன் கோலத்தையும் அறிபவர்—அவரா வண்டியில்—விஞ்ஞானி என்னும் அஞ்ஞானி கண்டு பிடித்த வண்டியில் செல்வார்? தண்டியலில் செல்லுகிறார் தயாபரனின் தயாள குணம் படைத்த பிரதிநிதி. தண்டியல் தானாக தயாபரனின் தயவால தூக்கிச் செல்லுகிறது? அந்த வல்லமைதான் அவருக்குக் கிடையாதே. தண்டியலை ஆறு மனிதர்கள் அல்லவோ தூக்கிச் செல்லுகின்றனர். பாவம்! அவர்களது உடலும் உள்ளமும் வேதனை பொறுக்காததால் 'ஆ அ, ஊ உ' என்று சொல்லிய வண்ணம் கடும் வெயிலிலே மடத்திற்கு அவரைக் கொண்டு செல்லுகின்றனர். அவர்—அந்த மதகுரு—மகேஸ்வரனின் பிரதிநிதி-அன்பே வடிவானவராம்.

* * *

ஆலயத்திலே ஆண்டவனுக்கு அபரிமிதமாய் ஆவின்பால் அபிஷேகமாகிறது. ஆலயத்திற்கு வெளியே ஆயிரமாயிரம் பச்சிளம் குழந்தைகள் பால் இல்லாது—உணவு இல்லாது அழுது துடிக்கின்றனர். ஆலய முழுதும் அலங்கார விளக்குகள். ஆலயத்துக்கு வெளியே உள்ள குடிசைகள் முழுதும் இருள். பக்திக்கும் பயித்தியக்காரத்தனத்துக்கும் என்ன ஒற்றுமை! விழா ஓர் புறம்! வேதனை ஓர் புறம்! விசித்திரமான போக்கு!

* * *

வேள்விகள் வளர்க்கப்படுகின்றன. வீணே நெய்யும், கோதுமை போன்ற தானிய வகைகளும் கொட்டப்படுகின்றன. உயிர்ப்பலியும் நடக்கிறது. அதோ, பசி வேதனையால் பலர் அலறித் துடிக்கின்றனர். மக்கள் படும் துயரைப் பாராமல் அவர்கள் மந்திரம் ஜபிக்கின்றனர்; பரிதாபத்துக்குரிய காட்சி!

* * *

ஓட்டைக் குடிசைகள்' ஆங்கு அரை நிர்வாண ஆடையுடன் மக்கள்! குளிர் கொட்டுகிறது; வறுமை வாட்டுகிறது. மழை பொழிகிறது. மண் குடிசைகள் மண்டியிடுகின்றன—எதிரே உள்ள கோயிலின் வானளாவிய கோபுரத்தைக் கண்டு வணங்குவதுபோல. நல்ல நாடகம்!

*   *   *

இடுப்பில் கட்டிய வேட்டியுடன் பாமரன் பணிந்து—பயந்து ஒதுங்கி நிற்கிறான். குற்றம் புரிந்தானா? இல்லை. கூத்தியுடன் கொஞ்சிக் குலாவினானா? அதற்கு அவனிடம் பணம் ஏது? பின் ஏன் அவன் குற்றவாளிபோல நிற்கிறான்? பெற்றதாய் பிரிந்து விட்டாள். அவளுக்கு ஈமச் சடங்கு செய்ய வேண்டும். புரோகிதர் இருபத்தைந்து ரூபாய்கள் கேட்கிறார்—"வேகிற வீட்டில் பிடுங்குவதுதான் லாபம்" என்பது போல. வேதனையில் மூழ்கிக் கிடக்கும் பாமரன், "பதினைஞ்சு ரூபாதான் சாமி என்னிடம் இருக்கு. அதை வச்சு காரியத்தை நடத்திருங்க சாமி" என்று கெஞ்சுகிறான். புரோகிதர் முடியாது என்கிறார். பிணம் சுடுகாடு செல்லாவிட்டால் வீடு நாறிப் போய்விடும். என் செய்வான். கடைசியில் இருபது ரூபாய்கள் தருவதாகச் சொல்லுகிறான். புரோகிதருக்கு உள்ளூர மகிழ்ச்சி. வெளிக்குக் கோபமா, "சரி, போய்த் தொலைடா பிடை, வர்ரேன்" என்று விடை பகருகிறார். பாமரன் கும்பிடு போட்டு நடக்கிறான். காணக் கிடைக்காத 'கருணை உள்ளம்!'

*   *   *

குற்றவாளி கூண்டிலே நிற்கிறான். அவன் செய்த குற்றம் உயர்ந்த வகுப்பார் குளிக்கும் தெப்பத்தில் தாகத்தினால் தண்ணீர் குடித்தான். அவனுக்கு நீதிபதி தீர்ப்பு வழங்குகிறார் ஓராண்டு சிறைவாசம் என்று. என்ன 'நல்ல தீர்ப்பு!'

*   *   *

வாழ்நாள் முழுவதும் வயலிலேயே உழைக்கிறான். ஆனால் அவனது வாழ்வு வளம் பெறவில்லை. வறுமையால் வாடுகிறான். வயலை உடையான் விதைக்காது விளைந்து செல்லுகிறான். உழைப்பது ஒருவன்! உண்பது ஒருவன்! விநோதமான அமைப்பு!

*   *   *

கப்பல் ஏறுகிறான் அவன்—யுத்தத்துக்கோ, வாணிபத்துக்கோ அல்ல. வேற்று நாடு சென்று இரத்தத்தை வியர்வையாகக் கொட்டி வயிறு வளர்க்க. பிறந்த பொன்னாட்டையும், பெற்ற தாயையும், அணைத்து மகிழ்ந்த மனைவியையும், கொஞ்சி மகிழ்வுற்ற குழந்தையையும் தனியே தவிக்கவிட்டுப் பிரிகிறான். பல ஆண்டுகள் கழித்துத் திரும்புகிறான் பழைய நிலைமையிலேயே. நாடு அப்படியே இருக்கிறது. தாயின் சமாதியைக் காண்கிறான். கட்டிய மனைவி காட்டுத் தரும்பாகிக் காட்சி அளிக்கிறாள். அவள் தனிமை குழந்தை மாண்டுபோனதைக் காட்டுகிறது. கண்ணீர் விடுகிறான். அவன் வாழ்வு துன்பக்கேணியாகிறது.

*   *   *

முடிவு

தேய்ந்து போன திராவிடத்திலே இப்படிப்பட்ட சித்திரங்கள் ஏராளம்.

தீயரின் கூட்டுறவால் தேய்ந்து போன திராவிடத்திலே வானிடை உறவாடும் மலைகளும், மலை வீழருவிகளும் இருந்தென்ன? வயல்கள் சூழ வற்றாத நதிகள் வளைந்து வளைந்து பாய்ந்திருந்தென்ன? மாங்குயில்கள் கூவிடும் பூஞ்சோலைகளும், மயிலாடும் கானகங்களும் இருந்தென்ன? தேனொழுகும் தீங்கனிகளும், நறுமணங் கமழும் மலர்களும் இருந்தென்ன? அல்லிகள் அலர்ந்திடும் குளங்களும், தாமரைகள் மலர்ந்திடும் தடாகங்களும் இருந்தென்ன? தேக்கும், சந்தனமும், மூங்கிலும் விளையும் காடுகள், அங்கே உலவிடும் யானைகளும், புலிகளும், மான்களும் இருந்தென்ன? மண்ணுக்கடியிலே பொன்னும் பிறவும், முப்புறமும் அலைகடலும், அதன் கீழே முத்தும் பவளமும் இருந்தென்ன? நஞ்சையும், புஞ்சையும் அதில் நவதானியங்களும் இருந்தென்ன?

கவிஞர்கள், கலைவாணர்கள், மதிவாணர்கள் இருந்தென்ன?

செல்வந்தர்கள், சிங்காரிகள் இருந்தென்ன?

காலைக் கதிரவன்—மாலை மதி—கண் சிமிட்டும் உடுக்கைகள்—வண்ண முகில்கள் இருந்தென்ன? தென்றல்—குளிர் காற்றுகள் இருந்தென்ன?

தேய்ந்துபோன திராவிடம், ஆம், தேய்ந்துபோன திராவிடம். முடிவு...மாய்ந்துவிடும், நிச்சயமாகவே மாய்ந்துவிடுமா? திராவிட இளைஞர்களே — வாலிபர்களே — பெரியோர்களே தீர்ப்புக் கூறுங்கள்,

—

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

விட அதிகமானவைகளாக இருக்க முடியாது! அவ்வளவு ஆனந்தமடைந்தார் அரசர்!

இன்பமும், துன்பமும், மகிழ்ச்சியும் மனச் சோர்வும், பிறப்பும் இறப்பும், "வாழ்க்கை" என்னும் வண்டியின் இரு சக்கரங்களல்லவா?...அவை இரண்டுமில்லாவிடில் அவ்வண்டி ஓடமுடியாது!...

இளவரசர் பிறந்ததும் ஆனந்தம்! மட்டற்ற மகிழ்ச்சி! அவர் காணாமற் போனதும் மீளாத்துயரம்! மீண்டும் இளவரசர் கண்டுபிடிக்கப் பட்டதும் எல்லையில்லா ஆனந்தம்!...

அந்த எல்லையற்ற ஆனந்தத்தை யடுத்து மக்களிடையே அளவற்ற வருத்தம் குடிகொண்டது!

ஆம். முல்லை நாட்டு இராணி—சாந்த சொரூபிணி — அன்புள்ளம் கொண்ட அரசரின் அருமை மனைவி—அழகு இளவரசரின் அன்புத் தாய்—இயற்கை யெய்திவிட்டார்! அழகுமைந்தனைப் பிரிந்த ஏக்கத்தால்!

ஆம். இளவரசர் கண்டுபிடிக்கப் பட்ட செய்தியை அரசியாருக்கு அறிவிக்க அந்தப் புரம் நோக்கி விரைந்து சென்றுகொண்டிருந்தார் வேந்தர்! அரசியார் இயற்கை யெய்திய செய்தியைமன்னருக்குத் தெரிவிக்க அழுதுகொண்டே ஓடி வந்தாள் ஒரு பணிப்பெண்! மன்னர் மீண்டும் மீளாத் துயரில் மூழ்கினார்.

அவரின் உயிர்த் தோழனாகிய நான் முதற் கொண்டு, ஆரியன் ஈறாக அரசவையிலிருந்தோர் யாவரும் அவருக்கு ஆறுதல் சொல்லிக் கொண்டிருந்தோம்! நாட்கள் சருகுகளென உதிர்ந்துகொண்டிருந்தன.

(தொடரும்)

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கோபித்தாலும், எவர் கட்டளையிட்டாலும், இவற்றிலே எதுவும் தன்தன் இயல்பை ஒரு போதும் மாற்றிக் கொள்ளாது. அதுபோலத்தான், திராவிட முன்னேற்றக் கழகமும், ஆளவந்தார்கள் 144 போட்டுவிட்டார்கள் என்ற ஒரு காரணத்திற்காக, தன்னுடைய பகுத்தறிவுப் பிரசாரத்தை ஒரு விநாடி நேரம் கூட நிறுத்திவைக்காது.

இந்த அரிய உண்மையைத்தான், திண்டுக்கல் வட்டாரத்தைச் சேர்ந்த சித்தையன் கோட்டை, மிகத் தெளிவாக விளக்கிக் காட்டியிருக்கிறது— 21-8-51 அன்று.

அன்றைய தினம் மாலை அவ்வூரில் நடைபெறவிருந்த கழகக் கூட்டத்திற்குத் திடீரென 144 போடப்பட்டது நம் ஆட்சியாளர்களால்! ஜனநாயகத்தின் உயிர்நாடிபோன்ற பேச்சுரிமையை ஆட்சியாளர்கள் அழிக்க முயன்றால் அதைப் பார்த்துக் கொண்டு அம்மாவா இருப்பார்கள் நம் கழக வீரர்கள்? சிங்க ஏறுகள் எனச் சீறி எழுந்தார்கள். அஞ்சா நெஞ்சுடன் அறப்போர் புரிந்தார்கள். தடையை மீறிக் கூட்டத்தைத் தொடங்கினார்கள். பேச்சுரிமை எங்கள் பிறப்புரிமை என்று வீர முழக்கமிட்டார்கள்.

தடையை மீறிச் சொற்பொழிவாற்ற முயன்ற நம் "போர்வாள்" துணையாசிரியர் காஞ்சிகல்யாணசுந்தரம் அவர்களும், கூட்டத்தை நடத்திய முன்னணி வீரர்கள் ஆர். எஸ். எஸ். நடராசன், கே. எல், காமராசன், எஸ். வெங்கடாசலம், எம். எஸ். எஸ். மணி, என். அப்துல்காதர், கே, சாகுல் அமீது, டி. காளிநாதன், எஸ். ரத்தினசாமி, எம். காமாட்சி ஆகியோரும் கைது செய்யப்பட்டுள்ளனர் ஆட்சியாளர்களால்!

பேச்சுரிமையை நிலை நாட்டிய அந்த அஞ்சா நெஞ்சர்களைத் திராவிட சமுதாயம் மனமார வாழ்த்துகிறது. அதே நேரத்தில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் பகுத்தறிவுப் பிரசாரத்திற்கு 144 போட முயன்றால் இப்படித்தான் படுதோல்வி அடைவர் ஆட்சியாளர்கள்— எனவே இனியாவது இத்தகைய வீண் செயல்களில் இறங்கவேண்டாம் என்று அவர்களை எச்சரிக்கவும் விரும்புகிறது.

(13-ம் பக்கத் தொடர்ச்சி)

அதே பத்து ஆண்டுகளில், நகரங்களின் மக்கள் தொகையை மட்டும் தனியாகக் கணக்கிட்டுப் பார்த்தால், அது, 100-க்கு 44 விகிதம் உயர்ந்திருக்கிறதாம். சராசரி மக்கள் தொகை 14 சத விகிதம் மட்டுமே உயர்ந்து, நகரங்களின் மக்கள் தொகை மட்டும் 44 சத விகிதம் உயர்ந்திருப்பதிலிருந்து ஏராளமான மக்கள் கிராமப் பகுதிகளிலிருந்து நகரப் பகுதிகளுக்குக் குடியேறியிருப்பது தெளிவாகத் தெரிகிறதாம்.

இப்படியெல்லாம் வாய் திறந்து பேசியிருக்கிறது நம்ம சர்க்காரால் எடுக்கப்பட்டு நம்ம சர்க்காரால் வெளியிடப்பட்டுள்ள நம்ம சென்சஸ்.

ஆம்! அகில இந்திய காங்கிரஸ் கட்சியினர் அன்றோர் நாள் நடத்திவந்த "கிராமத்திற்குத் திரும்பிப்போ" என்னும் இயக்கம் பெற்றுள்ள பெரியதோர் தோல்வியைத்தான் திட்டவட்டமாக எடுத்துக்காட்டியிருக்கிறது 1951-ம் ஆண்டின் சென்சஸ்.

காங்கிரஸ் கட்சியினரின் தோல்விக் காண்டத்தில் இணைக்கப்பட வேண்டிய புதிய படலம் இது!

சிந்திக்கத்தூண்டும்
சிறந்த நூல்கள்!

அண்ணாதுரை இயற்றியவை

செல்லப்பிள்ளை	1	0
சாது	0	8
ஆலயூரார் உபதேசம்	0	12
எமிலிசோலா	0	6
வந்தது விபத்து	0	12
போர் முரசு	0	8
நாடு ஏடும்	0	6
தொழிலாளர் பிரச்னை	0	6
வர்ணனைகள்	0	4
தீ பரவட்டும்	0	8
தமிழர் மறுமலர்ச்சி	0	8
நூல்நிலையங்கள்	0	4
மறுமலர்ச்சி	0	4

மா. இளஞ்செழியன் இயற்றியது

இந்திய அரசியல் திட்டம்	2	0
தமிழன் தொடுத்த போர்	1	12
வகுப்புரிமை போராட்டம் (க. அன்பழகன்)	1	12

இராதாமணாளன் இயற்றியவை

மணப்புயல்	2	0
இளவரசி	1	8

மற்றும் திருமணங்களுக்குப் பரிசளிப்பதற்கு ஏற்ற நூல்கள் பல எம்மிடம் கிடைக்கும்.

பகுத்தறிவுப் பாசறை

147, பவழக்காரத் தெரு சென்னை

Edited Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimoliyar at Free Printers, 147, Coral Merchant St., Madras, Joint-Editor M. Ilanchelliyan B.A. (Hons)